
# உதயன்

சுடர் : 36 கதிர் : 276 | செவ்வாய்க்கிழமை | ஆவணி 15ஆம் நாள் 31 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## மருதங்கேணியில் 18 பேருக்கு தொற்று மூன்று கிராமங்களை முடக்கப் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஓக. 31
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதனையடுத்து, அங்கு மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் மறு அறிவித்தல்வரை முடக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
குறித்த மூன்று கிராமங்களி லும் நேற்று 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையிலேயே 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
வெற்றிலைக்கேணிJ/432, கட்டைக்காடு J/433, போக்கறுப்பு J/434 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளே தனிமைப்படுத்தல் பகுதிகளாக அறிவிக்கப்படவேண்

19

### கொரோனாவால் சாவு 216 தொற்று 4,562

கொழும்பு, ஓக. 31
இலங்கையில் மேலும் 216 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று முன்தினம் சாவடைந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

19

## பி.சி.ஆர்., அன்டிஜென் சோதனைகளில் வடக்கில் ஒரே நாளில் தொற்று 572

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31
வடக்கு மாகாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனைகளில் 572 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

19

| | |
|---|---|
| பி.சி.ஆர். | - 99 |
| யாழ்ப்பாணம் | - 48 |
| கிளிநொச்சி | - 210 |
| வவுனியா | - 215 |

செயன்முறைப் பரீட்சைகளைத் தவிர்த்து

### சா.தரப் பரீட்சைப் பெறுபேற்றை வெளியிட ஆலோசனை

கொழும்பு, ஓக. 31
2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சைகளை தவிர்த்து பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன என்று தகவல் வெளி

19

காணாமலாக்கப்பட்டோரின்

### உறவுகளுக்காக ஐ.நா. எப்போதும் துணைநிற்கும்

*அதன் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 31
இலங்கை மற்றும் உலகளவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களது உறவுகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தையொட்டி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கைக்கான

19

### அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

**அமைச்சரவை அங்கீகாரம்**

கொழும்பு, ஓக. 31
அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவை உப குழு செய்த சிபாரிசுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இது அடுத்த பட்ஜெட்டில் இருந்து பல கட்டங்களில் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை நேற்றுக் கூடியபோது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது

19



### கொரோனாவால் யாழில் ஐவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் மேலும் ஐவர் நேற்று உயிரிழந்தனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் ஒருவரும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும் கொடி

17

தடுப்பூசியை தகர்க்கக்கூடிய

### மற்றொரு திரிபு வைரஸ் தென்னாபிரிக்காவில்

கொழும்பு, ஓக. 31
கொவிட் தடுப்பூசியையும் எதிர்த்து பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என கருதப்படுகின்ற புதிய கொவிட் 19 பிறழ்வு தென் ஆபிரிக்காவில் இனங்காணப்

15

### ஈ.ழ உறவுகள் இன்னும் பதிலைத் தேடுகின்றனர்

*அமெரிக்கத் தூதுவர் ருவிற்*

கொழும்பு, ஓக. 31
இலங்கையில் பலரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் விடயத்தில் பதிலைத்

19



### இரு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்.ஓக.31
உடுவில் மற்றும் கீரிமலை பகுதிகளில் அமைக்கப்பட்ட இரு வீடுகள் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியால் நேற்று பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.
தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன அமைச்சால் தேசிய வீடமைப்பு அதிகார சபை

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசிரிய உதவியாளர்களின் சேவைக்காலம் குறைப்பு

## சம்பள ஏற்றம், பதவியுயர்வு பாதிப்பென சுட்டிக்காட்டு

**வவுனியா, ஓக. 31**

**வடக்கு மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களாக அரசால் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் சேவைக்காலம் 6 வருடங்களால் குறைக்கப்பட்டுள்ளது என்று குறித்த ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.**

அதனால் சம்பள ஏற்றம், பதவி உயர்வு போன்றவற்றில் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசினால் நியமனம் வழங்கப்பட்டு அவர்கள் பாடசாலைகளில் சேவையாற்றிய 6 வருட சேவைக் காலத்தைச் சேர்த்துக்கொள்ளாது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு கட்டாய இடமாற்றம் செய்து அங்கு கட்டாயம் 7 வருடங்கள் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனை விதித்துள்ளதாகவும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, 6 வருடங்கள் சேவைக் காலமும் அதனால் இழந்த தமது உரிமைகளும் கிடைக்கப் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-426)

---

*யாழ்.குருநகர் இளைஞன் கொலை;*

# சந்தேகநபர்கள் 6 பேர் யாழ்.பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் குருநகரில் இளைஞன் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த முதன்மைச் சந்தேகநபர் உட்பட 6 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்தனர்.

கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஜெரன் (வயது 24) என்பவர் படுகாயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தநிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில்வந்த மற்றொரு குழு அவர்கள் மீது சரமாரியாக வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது. குறித்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேக நபர்களான பாசையூர் வாள்வெட்டுக்குழு உறுப்பினர் ஒருவரின் சகோதரர்களைத்தேடி தீவகம் உட்பட பல இடங்களில் தேடுதல் நடத்தினர்.

இந்தநிலையில் 9 நாள்களின் பின்னர் முதன்மைச் சந்தேகநபர் உட்பட 6 பேர் சரணடைந்துள்ளனர். எனினும், முதன்மைச் சந்தேக நபர்களான சகோதரர்களில் ஒருவர் சரணடையவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளனர்.

இதேவேளை, ச்ம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் முன்னர் கைதுசெய்யப்பட்ட 5 பேர் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவருக்கும் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு மோதல் இடம்பெற்றதாகவும், அதன் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-26)

---

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த 650 தொன் சீனி சிக்கியது!

கொழும்பு, ஓக.31

நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்யாமல், சீதுவைப் பகுதியில் உள்ள இரண்டு களஞ்சியங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 6 இலட்சத்து 50 ஆயிரம் கிலோ கிராம் (650 தொன்) சீனி நுகர்வோர் விவகார அதிகார சபையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை உளவுத்துறைக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபை இரண்டு களஞ்சியங்களையும் சோதனையிட்டபோது 650 தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளது. இரண்டு களஞ்சியங்களின் முகாமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் கொழும்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவின் தலைவர் பிரதீப் களுதர ஆராச்சி உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த சோதனைகளை மேற்கொண்டுள்ளது. (எ-இ)

---

# நாடு முழுவதும் டெல்டா பரவியது எப்படி?

## ஆய்வுகள் ஆரம்பம்



கொழும்பு, ஓக. 31


நாட்டின் வெளிப்புறப் பகுதி களுக்கு கொரோனா வைர ஸின் கடுமையான மாறுபாடான டெல்டா பரவியது எப்படி என்பதை அறிய அடுத்தவாரம் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்தர இதனைத் தெரிவித்தார்.

டெல்டா மாறுபாடானது வெளிப்புறப் பிரதேசங்களில் பரவியுள்ளமை தொடர்பில் ஆய்வு செய்வதற்கு சுகாதாரத்துறை பிரதானிகள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமையவே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. இதேவேளை, டெல்டா மாறுபாடானது கொழும்பில் 100 வீதம் பரவுவதாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

---

# உங்கள் பிரிவுகளில் மட்டும் தடுப்பூசிகளைப் பெறுங்கள்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 31

கொவிட் தடுப்பூசிகளை பொதுமக்கள் தத்தம் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் மாத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்த பகுதிகளுக்குப் போதுமானளவு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் தங்களுக்கான அதிகார பிரதேசங்களில் மாத்திரம் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுங்கள். தடுப்பூசி நிலையங்கள் பலவற்றில் அண்மையில் பெரும் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்ட நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் 30 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மாத்திரம் கொழும்பு விகாரமஹாதேவி பூங்கா மற்றும் தியத உயனவில் நிறுவப்பட்டுள்ள தடுப்பூசி நிலையங்களில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

---

# கொரோனாவை ஏற்கும் மனநிலை அனைவருக்கும் உருவாக வேண்டும்

## சுகாதார மருத்துவ அதிகாரி திலீபன் அறிவுரை

வவுனியா, ஓக. 31

கொரோனாப் பெருந்தொற்றை வெற்றிகொள்வதற்கு, முதலில் அந்தத் தொற்றை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை எம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வி.திலீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களில் யாருக்காவது காய்ச்சல், இருமல், தடிமன், தலைவலி, உடல்வலி என்பன இருப்பின் கொரோனாத் தொற்றாகக்கூட இருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். மழையில் நனைந்த சளிக் காய்ச்சல், ஐஸ்கிறீம் குடித்து வந்த காய்ச்சல், நிறைய வேலை செய்ததால் உடல் அலுப்பில் வந்த காய்ச்சல் என்று உங்களை நீங்களே ஏமாற்றுவதுடன் தயவுசெய்து எங்களை தொடர்புகொண்டு என்ன மருந்து போடலாம் என கேட்காதீர்கள். நீங்கள் அலட்சியமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் உங்களுக்கு ஆபத்தானது என்பதை உணருங்கள்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான பலருக்கு மூச்செடுப்பதில் எந்தச்சிரமமும் இருக்காது. ஆனால் அவர்களின் குருதியில் ஒட்சிசனின் அளவு சாதாரண அளவைவிடக் குறைவடைந்திருக்கும்.

இன்னும் சிலருக்கு அவர்களது குருதியில் ஒட்சிசனின் அளவு சாதாரண அளவில் இருக்கும் ஆனால் அவர்களது நுரையீரலில் நீர்கோர்த்தல் ஆரம்பித்திருக்கும். இந்த இரு நிலைமைகளும் காணப்படுகின்றவர்களில், அவர்கள் சிறிய அளவிலான வேலையைச் செய்யும்போதே குருதியில் ஒட்சிசனின் அளவு சடுதியாகக் குறைவடைந்து உடனடியாக மயக்கம் ஏற்பட்டு சில நொடிகளில் மரணம் ஏற்பட வழிவகுக்கின்றது. ஆனால், இந்த இரு நிலைகளையும் ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் அவர்களுக்கு சிகிச்சையளித்து காப்பாற்றக்கூடிய வாய்ப்புள்ளது.

எனவே நீங்கள் செய்யவேண்டியது என்ன?

1. அறிகுறிகள் தென்பட்டால் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்பதை முதலில் உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள். கொரோனா யாருக்கும் வரலாம். அது தீண்டத்தகாத நோயோ அல்லது மறைக்கப்படவேண்டிய நோயோ அல்ல.
2. உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று அன்டிஜென் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்.

தாமதிக்காதீர்கள். நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு நீங்களே வெட்டிக்கொள்ளும் சவக்கிடங்கு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள் என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு நாட்டுடனும் எங்களுக்கு பகைமை இல்லை

# ஜெனிவாவில் இலங்கையை ஒவ்வொரு தடவையும் ஏன் இலக்கு வைக்கிறீர்கள்?

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கேள்வி

கொழும்பு, ஓக. 31

இலங்கையானது அனைத்து நாடுகளுடனும் நட்புறவையே பேணுகின்றது. எந்த நாட்டுக்கும் தீங்கு விளைவித்தில்லை. சுமையாக இருந்தும் கிடையாது. ஆனாலும் வருடா வருடம் ஜெனிவாத் தொடரின்போது இலங்கை இலக்கு வைக்கப்படுகின்றது. கடும் விமர்சனங்களும், குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இதற்கான உண்மையான காரணம் என்ன? மனித உரிமை விவகாரமா அல்லது இதன் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரல் ஏதேனும் உள்ளதா?

என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடர் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு.

செப்ரெம்பர் 12 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. அதேபோல செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபைக்கூட்டம் நியூயோர்க்கில் நடைபெறும். இவ்விரு கூட்டங்களிலும் நாட்டுக்கு பயன்களை பெறுவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். எமது நிலைப்பாடுகள் உரிய வகையில் அறிவிக்கப்பட்டுள்ளன. ஜெனிவா மற்றும் நியூயோர்க்கிலுள்ள எமது நாட்டு தூதுவர்கள் இவ்விவகாரத்தை கையாண்டுவருகின்றனர். கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களை தனித்தனியே சந்தித்து ஜெனிவா மாநாட்டுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் தொடர்பில் முழு விவரமும் சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றது. இலங்கையானது சகல நாடுகளுடனும் நட்புறவை பேணும் நாடு. அமைதியாக வாழவிரும்பும் நாடு. எமது நாட்டில் வேறு எந்தவொரு நாட்டுக்கும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. ஆனால் வருடாவருடம் ஜெனிவாத் தொடரில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. விமர்சனங்கள் குவிகின்றன. இதற்கான சரியான காரணம் என்ன. இது விடயத்தில் நீதி இருக்கின்றதா. கலந்துரையாடுவதற்கு பல விடயங்கள் உள்ள நிலையில் இலங்கை விவகாரம் முன்னிலைப்படுத்தப்படுவது ஏன்? இவை மனித உரிமைகளுடன் தொடர்புபட்டனவையா அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இடம்பெறுபவையா? தற்போது நெருக்கடி காலம். இப்படி இருந்தும் சில துறைகளில் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். இது தொடர்பில் தெளிவுபடுத்துவோம். எனவே, சவால்களுக்கு மத்தியில் முன்னோக்கிச் செல்வதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்து நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன். என்றார். (ஒ.44)




### நல்லூர் கந்தனுக்கு இன்று 19ஆம் திருவிழா



குயில் கூவும் குரலினிமை
குமரனின் வரவு கூறும்
மயிலேறும் மால்மருகன்
மாரனென அழகு காட்டும்
தையலர் இருவரினை
தண்ணருளான் பவனி காண
கயிலையின் காட்சிதனைக்
காட்டுதே எம் ஈழநல்லூர்.

தேவி.கணேஸ், ஆனைப்பந்தி

# நீதி கிடைக்கும் வரையில் போராட்டத்தை கை விடோம்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சூளுரை

யாழ்ப்பாணம், ஓக.31

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு மனு ஒன்றையும் அனுப்பியுள்ளனர். எமது உறவுகள் மீண்டும் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே எமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமது உறவுகள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களின் பெயர்களை மாற்றி வாழ்கின்றனர் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். அப்படியாயின் அவர் அதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

எமது போராட்டத்தை மழுங்கடிக்கவும், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் அவர் இவ்வாறு கூறுகின்றார். நாம் குறுகிய காலங்களில் இறந்துவிடுவோம். ஆனால் நீதி கிடைக்காமல் நாம் இறந்து விடக்கூடாது என்று வவுனியாவில் கவனவீர்ப்பு நடத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசுடன் இணைந்து சர்வதேசமும் நாடகமாடுகின்றதா? என்று மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தலைவி மனுவேல் உதயசந்திரா தெரிவித்தார். நேற்று தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:




எமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே 2 ஆயிரம் நாள்களுக்கு மேல் போராட்டம் நடத்தி வருகின்றோம். இந்தப் போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை. நாம் பணத்துக்காகப் போராடவில்லை. எமது பிள்ளைகளுக்கான நீதிக்காகவே போராடுகின்றோம் என்றார்.

உள்ளகப் பொறிமுறை என்பது வெறுமனே ஒரு கண்துடைப்பு. அதில் எங்களுக்கு ஒரு துளியேனும் நம்பிக்கை இல்லை என்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

நேற்று தம்பிலுவிலில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தை இரவோடு இரவாகக் கிளிநொச்சியில் அமைத்துள்ளனர். ஐ.நா. கூட்டத் தொடரில் இருந்து தப்பிக் கொள்ளவே அதை அமைத்துள்ளனர். உள்ளகப் பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றையே நம்புகின்றோம் என்று அவர் தெரிவித்தார். தற்போதைய கொரோனா சூழ்நிலையால் ஜெனிவா கூட்டத் தொடருக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. புலம்பெயர் உறவுகள் எமக்கு வலுச்சேர்க்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைலி க.கோகிலவாணி தெரிவித்தார்.

எமது உறவுகள் வரும்வரையில் போராட்டத்தைத் தொடருவோம். எமக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்று ஜெனிவாவிடம் கேட்டு நிற்கின்றோம். எமது நீதிக்கான போராட்டதுக்கு புலம் பெயர் உறவுகள் முன்னின்று குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அனுப்பப்பட்டுள்ள மனுவில் அனுபவ ரீதியாக உணர்ந்து நிராகரிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணிமனையை உங்கள் அறிக்கைகளில் புகழ்ந்து பேசுவது காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளான எங்களுக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கின்றது. தயவுசெய்து உண்மையைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இன அழிப்புக்கு சர்வதேச விசாரணைகளுடன் கூடிய பொருத்தமான சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை பரிந்துரையுங்கள்.

எம்முடன் போராடிய நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள். நீங்களும் எங்களைப் போன்று பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற ரீதியிலும், ஒரு பெண்ணால் தான் பெண்களின் துயரைப் புரிந்து கொள்ள முடியும் என்ற வகையிலும் நாம் இறப்பதற்கு முன்னதாக எங்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யுங்கள். உங்கள் பதவிக் காலத்துக்குள் எமக்கான தீர்வைக் காண உதவிடுங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110,6,213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மீண்டும் கூப்பன் யுகம்



## சம்பிக்க எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 31

**கொரோனா வைரஸ் தாக்கத்தின் நான்கு அலைகள் உருவாகுவதற்கு அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணம். எனவே, போலியான முறையில் நாட்டை மூடாமல், விஞ்ஞானபூர்வமான முடக்கத்தை நடைமுறைப்படுத்துங்கள். இல்லையேல் நிலைமை மோசமாகும்.**

-என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு. நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உச்சம் தொட்டுள்ளது. இந்நிலையில் விஞ்ஞானபூர்வமாக நாட்டை முடக்குமாறு துறைசார் நிபுணர்கள் உட்பட பல தரப்பினரும் வலியுறுத்தினர்.

ஆனால் நாடு முறையாக முடக்கப்படவில்லை. தமக்குத் தேவையான இடங்களை அரசு திறந்தே வைத்துள்ளது. இவ்வாறு பகுதியளவு நாட்டை முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையை குறைக்க முடியாது.

நாட்டை முடக்கும் தீர்மானம் ஜுன் மாதமளவில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இழுத்தடிப்புகள் செய்யப்பட்டு இறுதி நொடியிலேயே பெயருக்கு முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை இவ்வாறு போலியான முறையில் முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. பொருளாதாரப் பாதிப்புகள் மட்டுமே ஏற்படும் என்பதை ஆளுந்தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், தமது இயலாமையாலும், முறையற்ற முகாமைத்துவத்தாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முடக்கமே காரணம் என்ற கருத்தை உருவாக்கும் முயற்சியிலும் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் தொற்று வேகமாக பரவிவருகின்றது. அங்கிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவந்து புதிய திரிபுகளை உருவாக்குவதற்கும் அரசு முற்படுகின்றது. எமது நாட்டு மக்களை ஆய்வுகூட எலிகளாக்குவதற்கான முயற்சியா இது?

நாம் ஆட்சியை கவிழ்க்க முற்படவில்லை. மாறாக சுகாதாரத் துறை நிபுணர்கள் உட்பட துறைசார் நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுமாறே அரசைக் கோரிவருகின்றோம். ஆனால் அவர்கள் எதிரணியில் இருக்கும்போது போலிகளை பரப்பி, ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர்.

இந்நாட்டில் நான்கு அலைகள் ஏற்படுவதற்கும் இந்த அரசுதான் காரணம். உயிரிழப்புக்களுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும். தடுப்பூசிகளை வாங்கச் சொன்னபோது, பாணிக்குப் பின்னால் ஓடி காலத்தை இழுத்தடித்தனர். டொலர் பிரச்சினையால் மீண்டும் கூப்பன் வரிசை யுகம் உருவாகும் அபாயமும் உள்ளது -என்றார் சம்பிக்க. (ஒ-44)

# பஞ்சம்தான் தலைவிரித்தாடப்போகிறது தமிழ் முற்போக்கு கூட்டணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 31

நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தப்போவதாக ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, -'பாண் வரிசை', 'கூப்பன் முறை' உள்ளடங்கலான பஞ்ச யுகத்தை நோக்கியே நாட்டை மீண்டும் அழைத்துச்செல்கின்றது.

ஆளுந்தரப்பின் முறையற்ற முகாமைத்துவம், உறுதியற்ற கொள்கைகளால் நாட்டு மக்களே பேராபத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிதிச் செயலாளரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, அரசின் தெளிவற்ற உறுதியற்ற நிதி முகாமைத்துவக் கொள்கையால் பெரும் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தாக்குப்பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை மூடிமறைப்பதற்கும், தற்காலிக சமாளிப்புக்காகவுமே வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல உணவு மற்றும் மருந்து இறக்குமதிக்கும் கோட்டா முறைமை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் உள்ளது. எனவே, இன்னும் ஓரிரு மாதங்களில் இந்நாட்டில் உணவுப் பண்டங்களைப் பெறமுடியாத நிலைமை உருவாகும். 1970 களில் ஏற்பட்ட பஞ்சம் போல வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலையும், கூப்பன் முறையும்கூட அறிமுகப்படுத்தப்படலாம். தற்போதே பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே இதைவிடவும் மோசமானதொரு நிலைமை உருவாவதை தடுக்க வேண்டும்.

இதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுகளை நடத்தி தீர்வுத் திட்டங்களை வகுக்குமாறும், அப்போதுதான் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் அரசாங்கத்துக்கு நாம் ஆலோசனை வழங்கி வருகின்றோம்.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடன் பேசமாட்டோம் என ஆளுந்தரப்பு முரண்பிடிக்கின்றது.

சுபீட்சம், சுபீட்சம் என ஒப்பாரி வைத்தே உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துகின்றோம் என்ற போர்வையில் தனது சகாக்களை கவனிப்பதற்காக உள்நாட்டில் பொருள்களின் விலையை அரசு உச்சம் தொட வைத்தது. ஆனால் உள்நாட்டு உற்பத்தியும் மேம்படவில்லை. தனவந்தர்களுக்கு வரி விலக்குகளை வழங்கப்போய் திறைசேரிக்கு கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசின் தெளிவற்ற நிதி முகாமைத்துவக் கொள்கையே டொலர் பிரச்சினைக்கு காரணம். எனவே, எப்படியாவது இதனை நிவர்த்தி செய்ய வேண்டும்.

பஞ்சயுகத்தின் ஆரம்பக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம். தீர்வு இல்லையேல் நிலைமை மோசமாகும். நாட்டை முடக்கியதால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என அறிவிப்பு விடுத்து நாட்டு மக்களை அரசு ஏமாற்ற முற்படக்கூடாது. இதய சுத்தியுடன் செயற்பட வேண்டிய தருணம் இது -என்றார். (ஒ-44)

# நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க ஈஸ்டர் தாக்குதலை கருவியாக்குகின்றனர்

## பீரிஸ் வேதனை

ஈஸ்டர் தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தை தாக்குவதற்கான முயற்சிகளும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சி வெற்றியளிக்காது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் -என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள சகல நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் தெளிவுபடுத்துவதற்காக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அதற்காக திகதியொன்றை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்தக் கோரிக்கைக்கு பேராயரின் அலுவலகத்திலிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. இதன்படி விரைவில் சந்திப்பு நடைபெறும் என நம்புகின்றேன்.

குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகைகள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், சட்டமா அதிபர் திணைக்களம், சி.ஐ.டி., ரி.ஐ.டி. மற்றும் புலனாய்வுப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள பெறுபேறுகள் சம்பந்தமாக பேராயருக்கு தெளிவுபடுத்துவதே சந்திப்பின் பிரதான நோக்கம். ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு அண்மைக்காலத்தில் சில கருத்துகள் வெளியிடப்பட்டன.

எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தாங்கமுடியாத சோகம், வேதனை மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை இலக்காகக்கொண்டே மேற்படி அறிவிப்புகளும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இவ்விவகாரம் தொடர்பில் நீதி வேண்டும் என்பதே கத்தோலிக்க சபையின் நிலைப்பாடாகும். ஆனால் இதனை சிலர் வேறு நோக்கங்களுக்காக சர்வதேச தளத்தில் பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர். கத்தோலிக்க சபையின் நோக்கம் இதுவல்ல. வேறு சிலரே இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அரசைக் குழப்புவது அவர்களின் நோக்கம் அல்ல. மாறாக இலங்கைப் பொருளாதாரம் மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்படுகின்றனர். அந்த முயற்சி கைகூடாது. அதற்கு இடமளிக்கமாட்டோம். நாட்டைப் பாதுகாப்போம் -என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,000 ரூபா எப்போது வரும்? மன்னார் பயனாளிகள் கேள்வி

**மன்னார், ஓக. 31**

**கொரோனாத் தொற்று இலங்கையில் தீவிரமாகப் பரவி வருவதனால் நாடு தற்பொழுது முடக்கப்பட்டிருக்கும் நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு வழங்கும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ள மன்னார் பயனாளிகள் குறித்த நிதியைப் பெறுவதற்கு இலவு காத்த கிளிபோன்ற நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட, அரச சலுகைகளைப் பெறாத குடும்பங்களுக்கு 2ஆயிரம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துது. மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 680 குடும்பங்கள் இந்த உதவியைப் பெறுவதற்குத் தகுதி பெற்றன. எனினும் ஆயிரம் குடும்பங்களே இந்த உதவியைப் பெற்றுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு மேற்படி உதவிகள் சென்றடையவில்லை.

இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலரிடம் வினவியபோது, எங்களுக்கு முதல் கட்டமாக ஒரு தொகை பணம் வந்தது. அது உரிய முறையில் பகிரப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் வந்ததும் உடனடியாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் - என்றார். (ம-60)

*நிதி கிடைக்காமையால்*

# உலருணவுப் பொதிகளை வழங்குவதில் நெருக்கடி!

*கூட்டுறவுச் சங்கங்கள் குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏராளமான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்று கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்களை தொடர்ச்சியாக வழங்குவதற்கு எமக்கு நிதி கிடைக்கவில்லை. ஆனால் உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான பட்டியல்கள் மாத்திரம் தொடர்ச்சியாக வந்தவண்ணம் உள்ளன.

மேலும் பொருள்களை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் எம்மிடம் பெறப்பட்டபோது காணப்பட்ட விலைகளில் தற்போது பொருள்கள் இல்லை. அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன - என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு வினவிய போது, தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான நிதியினை நாம் திறைசேரியிடம் கோரியுள்ளோம் எனவே நிதி கிடைத்ததும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் - என்றார். (ம-214)

# யானையின் தாக்குதலில் முதியவர் காயம்

கிளிநொச்சி,ஓக.31

யானைத் தாக்குதலுக்கு இலக்காகி 75 வயது முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இரணைமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த முதியவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களிடம் மீன் கொள்வனவுக்காகச் சென்றவரையே யானை தாக்கியுள்ளது. (ஐ-6)

*இறந்தவருக்கு கொரோனாத் தொற்று*

# சடலத்தை உறவினரிடம் ஒப்படைத்ததால் பதற்றம்




முல்லைத்தீவு, ஓக. 31

புதுக்குடியிருப்பு வள்ளுவர்புரம் பகுதியில் உயிரிழந்த வயோதிபரின் சடலத்தை அவருடைய உறவினர்களிடம் ஒப்படைத்த மருத்துவமனை நிர்வாகம், குறித்த நப்பர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர் என்று தெரியவந்ததை அடுத்து சடலத்தை திரும்பப் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலம் மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்ட நிலையில் பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவு நேற்றுமுன்தினம் மாலை வெளியானது. எனினும் முன்னதாகவே குறித்த முதியவரின் சடலம் அவருடைய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், பி.சி.ஆர். முடிவில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த சடலம் மருத்துவமனையால் திரும்பப் பெறப்பட்டதுடன் சுகாதார நடைமுறைகளின் கீழ் இறுதிக்கிரியைகளை மேற் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-19)

# மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

கிளிநொச்சி.ஓக.31

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கடல் உணவுகள் அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேச செயலர் பிரிவாக மாந்தை கிழக்கு காணப்படுகின்றது. முல்லைத்தீவுக் கடலில் பிடிக்கப்படுகின்ற கடல் உணவுகள் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு கொண்டுவரப்படுவதில்லை எனவும், அவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் அதிக விலையில் விற்கப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கடல் உணவு ரூபா 800 இற்கு மேற்பட்ட விலையில் விற்கப்படுவதன் காரணமாக அதனை வாங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்ரிக் ஜோன்சன் தெரிவிக்கையில், முல்லைத்தீவு கடற்கரையிலேயே ஒரு கிலோ மீன் 500 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. தற்போது கடலில் மீன்பிடி குறைவாக உள்ளது. மாந்தை கிழக்கில் கடல் உணவுகளின் விலை அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் முல்லைத்தீவில் இருந்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் மாந்தை கிழக்கு உள்ளது. முல்லைத்தீவில் இருந்து கடலுணவுகளைக் கொண்டு செல்வதில் போக்குவரத்துச் செலவு உள்ளது. மன்னார், கிளிநொச்சி மீன்கள் மாந்தை கிழக்குக்கு சென்றாலும் முல்லைத்தீவு மீனையே மாந்தை கிழக்கு மக்கள் விரும்புகின்றனர். மாந்தை கிழக்குப் போக்குவரத்துகள் சீராகி முல்லைத்தீவிலும் மீன்களின் விலை குறையு மானால் புதிய பொறிமுறையில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளுக்கு முல்லைத்தீவு கடல் உணவுகளை குறைந்த விலையில் விற்பதற்கான ஏற்பாடுகளை எதிர்காலத்தில் செய்யலாம் - என்றார். (ஐ-13)

# அரசியல் கைதிகளை அரசு உடன் விடுவிக்க வேண்டும்

*அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வலியுறுத்து*

வவுனியா, ஓக.31

எங்கள் பிள்ளைகளை விடுவியுங்கள். அல்லது எங்கள் பிள்ளைகளோடு இருந்து எம்மைச் சாக விடுங்கள் என்று அரசியல் கைதிகளின் பெற்றோர் வேண்டுவதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட் தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் கொரோனாத் தொற்றும், உயிரிழப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அவர்களது உறவினர்கள் நீண்ட நாள்கள் சந்திக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அரசியல் கைதிகளின் வயது முதிர்ந்த பெற்றோருக்கும் தொற்று அபாயம் இருக்கின்றது. தங்கள் உறவுகளின் முகங்களைப் பார்ப்போமா என்ற ஏக்கத்துடன் அவர்கள் உள்ளனர். ஆனால் இந்த ஆதங்கம் அரசுக்குப் புரியப் போவதில்லை.



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய அண்மையில் ஜனாதிபதி ஒரு குழு அமைத்திருக்கிறார். இது ஜெனிவாவை ஏமாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று நாம் கோருகின்றோம் - என்றார். (எ-110)

# பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு இடையூறு இருவர் விளக்கமறியலில்

முல்லைத்தீவு, ஓக. 31

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அச்சுறுத்தியமை தொடர்பில் முள்ளியவளையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன பெரமுனவின் எம்.பி அசங்கவுக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஓக. 31

பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்னவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இதனை உறுதிப்படுத்தியுள்ளார். அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து தற்போது வரை 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# நாணய நிதியத்தின் வளங்களை பயன்படுத்த வேண்டும் இலங்கை

## அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, ஓக. 31

சர்வதேச நாணய நிதியத்தின் ஓர் உறுப்பு நாடான இலங்கை, நிதியத்தின் வளங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் பொருளாதார செயற்றிறனை, மேம்படுத்திக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம் தற்போது ஆரோக்கியமான நிலையில் இல்லை. இந்த நிலையில் இருந்து மீண்டு வருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களைப் பயன்படுத்துவதே ஒரேவழி - என்றார்.

இலங்கையின் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுடனான தனது அண்மைய சந்திப்புக் குறித்து கருத்துரைத்துள்ள அவர், முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சில சவால்கள், வரம்புகள் மற்றும் திறந்த, வெளிப்படையான சூழலின் தேவை பற்றியும், முதலீட்டாளர்களின் ஆபத்து தொடர்பாகவும் பஸிலுடன் விவாதித்தார் என்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# தொற்று நிலைமையை பொறுத்து ஊரடங்கு தொடர்பில் தீர்மானம்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு



கொழும்பு, ஓக.31

**கொரோனா என்பது சாதாரண நோய் அல்ல. அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்திற்கொண்டே ஊரடங்குச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதா? அல்லது தளர்த்துவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படும்.**

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், பெருந் தோட்டத்துறை அமைச்சருமான ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை 'பெருந்தொற்று' என உலக சுகாதார நிறுவனம் பிரகடனப் படுத்தியுள்ளது.

மருத்துவத் துறையில் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளால் கூட வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. கொரோனாத் தொற்றை சாதாரண நோய் என ஒருபோதும் கருதமுடியாது.

அனைத்துத் தரப்பினரும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

கொரோனாத் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு நாடு தழுவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைகளுக்கு அமையவே ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதா? அல்லது தளர்த்துவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படும். -என்றார். (எ-இ)

# நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு,ஓக.31

சட்டவிரோதமான முறையில் நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆரோக்கிய புரம் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

ஆரோக்கியபுரத்தைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் ஐயன்கன்குளம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ-19)

# திட்டமிடல் இன்மையாலேயே கொரோனாத் தொற்று தீவிரம்!

## முருத்தெட்டுவ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

சுகாதார அமைச்சின் திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளின் காரணமாக வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இலக்கு ஜனாதிபதிக்கு இருந்தாலும், அந்த இலக்கை முன்னெடுக்கக்கூடியவர்கள் உரிய வகையில் செயற்படாவிட்டால் வெற்றி பெற முடியாது என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, நாட்டிலுள்ள விசேட மருத்துவ நிபுணர்கள் தங்களது அனுபவத்தைக் கொண்டு கொரோனா நிலைமை தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். ஆனால் தற்போது சுகாதார அமைச்சு செயலாற்ற முடியாத ஓர் அமைச்சாகவே காணப்படுகிறது.

60 ஆண்டுகளாக நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு எவ்வாறு காணப்பட்டது என்பது தொடர்பான அனுபவம் எமக்குள்ளது. அந்தக் காலகட்டத்தில் எவ்வித நெருக்கடிகளும் இன்றி மக்களுக்கு சுகாதார சேவை வழங்கப்பட்டது.

சுகாதார அமைச்சிடம் முகாமைத்துவமும் இல்லை, முறையான கண்காணிப்பும் இல்லை. தற்போது அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவரிடம் குப்பைகளே ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றை துரிதமாக தூய்மைப்படுத்த வேண்டும் என நாம் அவரிடம் தெரிவித்துள்ளோம்.

வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கப்படுகின்றது என்று கூறப்பட்டாலும், அந்த வேலைத்திட்டம் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்படவில்லை. நாட்டை முடக்க வேண்டிய காலத்தில் முடக்கவில்லை. தற்போது வைரஸ் தீவிரமடைந்த நிலையில் தான் நாடு முடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன கூறியதைப் போன்று ஆரம்பத்திலேயே நாடு முடக்கப்பட்டிருக்குமாயின் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. தற்போது பெருமளவான சுகாதார ஊழியர்களும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதே நிலைமை தொடருமாயின் சுகாதார சேவைக் கட்டமைப்பும் இல்லாமல் போகும்.

தற்போது மருத்துவமனைகளிலும் , வீடுகளிலும் நோயாளர்கள் நிரம்பியுள்ளனர். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் வழமைக்கு மாறாக அதிகளவான மக்கள் வீதிகளில் நடமாடுகின்றனர். இது பிரயோசனமற்றதாகும் -என்றார். (எ-இ)

# காட்போட் சவப்பெட்டிக்கு அதிகரிக்கின்றது கேள்வி!

## யாழ்ப்பாணத்தில் இருந்தும் கோரிக்கை கல்கிசை நகராட்சி உறுப்பினர் தெரிவிப்பு

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்யப் பயன்படுத்தப்படும் காட்போட் சவப் பெட்டிகளுக்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது என்று தெஹிவளை கல்கிசை நகராட்சி மன்ற உறுப்பினர் பிரியந்த சஹபந்து தெரிவித்துள்ளார்.

காட்போட் சவப்பெட்டிகளை தெஹிவளை கல்கிசை நகராட்சி மன்றம் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை நகராட்சி மன்ற உறுப்பினர் பிரியந்த சஹபந்துவே முன்னின்று செயற்படுத்தியிருந்தார்.

தற்போது தெஹியோவிட்ட, பெல்மடுல்ல, வரகாபொல, பெலியத்த பிரதேச சபைகள் இந்தச் சவப்பெட்டிகளை கோரியுள்ளன என்றும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 100 சவப் பெட்டிகளை கோரியுள்ளார் என்றும் பிரியந்த சஹபந்து தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுத் தவிர மற்றக் காரணங்களால் சராசரியாக 400 பேர் தினமும் இறக்கின்றனர்.

தினமும் 200 மரங்கள் சவப்பெட்டிகளை தயாரிக்க வெட்டப்படுகின்றன. காட்போட் சவப்பெட்டிகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்று சஹபந்து கூறினார். தற்போது தெஹிவளை கல்கிஸ்ஸை நகராட்சி மன்றத்தால் காட்போட் சவப்பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சீனாவில் தொற்றுநோய் பரவுவதற்கு முன்பு இந்த திட்டம் 2019ஆம் ஆண்டு சஹபந்துவால் நகராட்சி மன்றத்துக்கு வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# பொலிஸ் உத்தியோகத்தர் மாங்குளத்தில் சடலமாக மீட்பு

மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு, கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பொலிஸ் கொஸ்தாபல் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். இவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப் பட்டுள்ளது. (ஐ-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நம்மை நாமே காப்போம்!

தனிமைப்படுத்தல் ஊரங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை திருப்தியளிக்கும் வகையில் இல்லை. ஆயிரக் கணக்கான தொற்றாளர்கள் தினமும் இனங்காணப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இறப்புக்களின் எண்ணிக்கையும் குறைவதாக இல்லை.


வடக்கு மாகாணத்தில் இப்போது கொரோனாத் தொற்று நிலைமை முன்னெப்போதும் இல்லாத வகையில் தீவிரம் பெற்றிருக்கின்றது. நாளாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றனர். எழுமாறாக மேற்கொள்ளப்படும் சோதனைகளில் அதிகளவானோருக்குத் தொற்று உறுதியாகியிருக்கிறது.

வடக்கில் பொதுமக்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை உரிய வகையில் கடைப்பிடிக்காத நிலைமையே இருக்கின்றது. ஒழுங்கைகளுக்குள் கூடும் நெரிசல் மிக்க சந்தைகளையும், வர்த்தக நிலையங்களில் குழுமியிருக்கும் சனக் கூட்டத்தையும் காண முடிகின்றது. மக்களின் இவ்வாறான செயற்பாடுகள் நிலைமையை இன்னமும் மோசமாக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

மறுபுறத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறைகளும் மக்கள் வீதிகளில் இறங்குவதற்குக் காரணமாகியிருக்கின்றது. அன்றாடம் தேவைப்படும் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், மக்கள் வீடுகளுக்குள் முடங்கியிருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறுதான்.

ஆட்சியிலுள்ள அரசாங்கம் மக்கள் நலன் தொடர்பில் எந்தவிதப் பிரக்ஞையும் இன்றியிருக்கின்றது. ஒரு பொதுமுடக்கம் பெயரளவில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் அனைத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அனைத்தும் வழமை போன்று இயங்குகின்றன. இவற்றால் பாதிக்கப்படப் போவதும், இழப்புக்களைச் சந்திக்கப் போவதும் சாதாரண பொதுமக்களே. அதை மனதில் இருத்தி அனைவரும் செயற்பட வேண்டும்.

இயலுமானவரை வீடுகளில் இருந்து வெளியேறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொருள் கொள்வனவிலும் குழுமியிருப்பதைத் தவிர்த்து தனிநபர் இடைவெளிகளைப் பேணுங்கள். சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ளுங்கள். எவரும் கேட்கவில்லை என்பதற்காகத் தான்தோன்றித்தனமாகச் செயற்படாதீர்கள். பொறுப்பு உணர்ந்து நடந்து சமூகத்தையும், குடும்பத்தையும் பாது காத்துக் கொள்வோம்.



# அன்டிஜென் சோதனையில் 125 பேருக்குத் தொற்று உறுதி

**யாழ்ப்பாணம், ஓக. 31**



**யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 125பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 6 நாள்களில் ஆயிரத்து 389 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31பேருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 23பேருக்கும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 36பேருக்கும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5பேருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3பேருக்குமாக 125 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஒ,5)

# பெரமுன கூட்டிலிருந்து சு.க. வெளியேறும் எண்ணம் இல்லை

கொழும்பு, ஓக. 31
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 70ஆவது ஆண்டு விழா செப்ரெம்பர் 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவிவருவதால் இம்முறை பிரதான நிகழ்வுகள் எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை. இரத்த தானம் செய்யும் நிகழ்வையே கட்சி ஆதரவாளர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.
எனினும், எதிர்வரும் 2 ஆம் திகதி சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி கட்சித் தலைமையகத்தில் குறிப்பிட்ட சிலரின் பங்குபற்றலுடன் விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது என தெரியவருகின்றது.
இக்கூட்டத்தின்போது மொட்டு தலைமையிலான கூட்டணி அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குமென்ற தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது என அறியமுடிகின்றது.
அத்துடன், அரசிடம் சில யோசனைகளை முன்வைப்பதற்கும் இதன்போது முடிவெடுக்கப்படலாம்.
அரசிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேற வேண்டும் என அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்திவருகின்றனர். அண்மையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலும் இதனை வலியுறுத்தியுள்ளனர். எனினும், பெரும்பாலான உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து பயணிக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

(ஒ,44)

# ஆப்கானிஸ்தானிலிருந்து 66 இலங்கையர்கள் மீட்பு

### *21 பேர் அங்கேயே தங்குவதற்குத் தீர்மானம்*

கொழும்பு, ஓக. 31
ஆப்கானிஸ்தானில் இருந்து இதுவரை 66 இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதேநேரம் 21 பேர் அங்கேயே தங்கியிருக்கத் தீர்மானித்துள்ளனர்.
இது தொடர்பில் வெளிவிவகாரத்துறை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
[illegible]புக்கள் உள்ளடங்கலாக, [illegible]தானில் நிலவும் முன்னேற்றங்கள் குறித்து இலங்கை தொடர்ந்தும் அவதானித்து வருகின்றது. சர்வதேச உதவியைப் பெற்று இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். இதுவரை 66 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். 21 பேர் அங்கேயே தங்கியிருக்கத் தீர்மானித்துள்ளனர். மேலும் 7 பேர் விரைவில் வெளியேற்றப்படவுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தனது மீட்புப் பணியை நிறைவுறுத்த வேண்டிய இறுதித் திகதி இன்றாகும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 05 . 1947

மறைவு 23 . 08 . 2021



### திரு.நாகலிங்கம் இரட்ணம்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் இரட்ணம் அவர்கள் கடந்த (23.08.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், லேனிகா, யசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேந்திரன், நிருபா ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிஷன், கனிஷன், சங்கீத், யாதவ், தீக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கோபால்ராஜ்ஜின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை மற்றும் தவமணியின் அன்பு மருமகனும், நாகேஸ்வரன், புஸ்பராணி, ஜெயராணி, இராஜேஸ்வரன், விக்னேஸ்வரன், ஞானேஸ்வரன், சண்முகராணி, ரெட்னேஸ்வரன், வதனராணி, காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, தனஞ்சயன் கணேசபாலன் ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி, காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் செல்வநாயகம், இராஜநாயகி, பானுமதி, தேவரஞ்சனா, சிவகுமார், கலைமதி, இராஜேஸ்வரன், சுபாஷினி, வனிதா, தவச்செல்வி ஆகியோரின் சகோதரனும் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.08.2021) செவ்வாய்க்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.** **076 6166 117** **077 8851 732** **தகவல்: குடும்பத்தினர்.**


# வர்த்தகர்களுக்குச் சேவையாற்றி மக்கள் வயிற்றில் அடிக்காதீர்கள்

## மருத்துவர் ஜயருவான் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணையகம் மற்றும் அரச ஒளடத உற்பத்தி ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனம் என்பன அப்பாவி மக்களுக்காக சேவையாற்ற வேண்டுமே அன்றி வர்த்தகர்களுக்காக அல்ல. சர்வதேச விலைகளின் அடிப்படையில் நாட்டில் 2 ஆயிரத்துக்குக் குறைந்த பெறுமதியில் பி.சி.ஆர். பரிசோதனைகளும், 600 ரூபாவுக்குக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொள்ளமுடியும்.

இவ்வாறு மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அப்பாவி மக்களின் பணத்தில் கல்வி கற்ற மருத்துவராவார். அவரும் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் சேவையாற்ற வேண்டியது வர்த்தகர்களுக்காக அல்ல. நாட்டிலுள்ள அப்பாவி மக்களுக்காகவே அவர் சேவையாற்ற வேண்டும்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணையகமே மிக மலிவாக சிறந்த மருந்துகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறுவனம் ஆகும். உலகிலுள்ள விலை அடிப்படையில் அவதானிக்கும் போது தற்போது நாட்டில் 2 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த பெறுமதியில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் - என்றார். (ஏ-இ)

# இந்தியா – இலங்கை இடையே விமான சேவைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஓக.31

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே சாதாரண விமான சேவையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய அட்டவணையின் கீழ், மும்பை, சென்னை மற்றும் பெங்களூருக்கு வாரத்துக்கு 4 விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம் மற்றும் கொச்சி இடையே வாராந்த விமானங்களும் இயக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹைதராபாத், புதுடில்லி மற்றும் கொழும்புக்கு இடையே இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விமானங்கள் இயக்கப்படும் என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பயணிகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

வீட்டுத்திட்ட விவகாரம்

# அபிவிருத்தி உத்தியோகத்தரின் சம்பளம் நிறுத்தப்பட்டது

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், ஓக. 31**

**சாவகச்சேரி பிரதேச செயலகத்திலிருந்து சங்கானை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டமைக்கு எதிராக அபிவிருத்தி உத்தியோகத்தர் மேன்முறையீடு மேற்கொண்டுள்ள நிலையில், அவரது சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு எதிராக பாதிக்கப்பட்ட அலுவலர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.**

அரசால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டத்தில் அரசியல் தலையீடுகள் காரணமாக பயனாளிகள் தெரிவில் குளறுபடி நடந்ததாக அபிவிருத்தி உத்தியோகத்தர் அம்பலப்படுத்தியிருந்தார். பிரதமரின் இணைப்பாளர் தலைமையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில் மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் பழிவாங்கும் நோக்குடன் சங்கானை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

அவரது இடமாற்றம் கூட நிர்வாக நடைமுறைக்கு முரணாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் இடமாற்றத்துக்கு எதிராக அமைச்சுக்கு அவர் மேன்முறையீடு மேற்கொண்டிருந்தார். ஆனாலும் அவரது மேன்முறையீடு தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கப்படாமல், யாழ். மாவட்டச் செயலரின் கோரிக்கைக்கு அமைவாக அமைச்சால் மேற்படி அலுவலர் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தனது இடமாற்றத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில் அவரின் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கணக்காளர் தனது சம்பளத்தை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே வீட்டுத்திட்ட விவகாரம் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட பயனாளி ஒருவர் சாவகச்சேரி பிரதேச செயலருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# அனைவருக்கும் நுழைவிசைவு: யு.ஏ.ஈ. அறிவிப்பு

கொழும்பு, ஓக.31

அனைத்து நாட்டினருக்கும் சுற்றுலா நுழைவிசைவு வழங்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.

இலங்கையர்களும் சுற்றுலா விசாவுக்காக விண்ணப்பிக்க முடியும். வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் முழுமையாக பெற்றிருக்க வேண்டும். உலக சுகாதார அமைப்பால் இதுவரை அஷ்ராசெனகா, மொடர்னா, பைசன், ஜோன்சன் ஜோன்சன், சினோபார்ம், சினோவேக் ஆகிய கொவிட் தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தமது நாட்டுக்கு வர தடை விதிக்கப்பட்ட நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு சுற்றுலா நுழைவிசைவுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வெளிநாட்டிலிருந்து வரும் அனைத்துப் பயணிகளும் விமான நிலையத்தில் வைத்து கட்டாய விரைவான அன்டிஜென் சோதனையை மேற்கொள்ள வேண்டும் - என ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்குப்பிட்டிப் பாலம் ஆபத்தான நிலையில்!

கிளிநொச்சி, ஓக. 31

**கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலம் விரிசல்கள் விழுந்து ஆபத்தான நிலையை நோக்கிச் செல்கின்றதா என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.**



யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் இணைக்கும் குறித்த பாலம் கடந்த 2011ஆம் ஆண்டு தற்போதைய பிரதமரும் அப்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவைக்கப்பட்டது. தற்போது அந்தப்பாலத்தின் பல இடங்களிலும் வெடிப்புக்கள் மற்றும் விரிசல்கள் விழுந்துள்ளன. பாலம் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் கொங்கிரீட்டிலான பகுதிகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், பாலம் துருப்பிடித்து சிதைவுகள் ஏற்பட்டு வருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. பாலத்தைத் தாங்கும் ஆணிகள், நட்டுகள் மற்றும் பாலத்தின் முக்கிய பகுதிகளில் உடைவு ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் தற்போதைய நிலை தொடர்பில் அந்தப் பகுதியால் சென்றுவரும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளதுடன், சீரமைப்புப் பணிகளை துரிதகதியில் மேற்கொண்டு சீரான போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தித் தரவேண்டும் - என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# வேடிக்கை பார்ப்பதற்கு அரசும், அமைச்சும் ஏன்?

## எதிர்க்கட்சி கடும் விமர்சனம்

கொழும்பு, ஓக. 31

வர்த்தகர்கள் தாங்கள் விரும்பிய விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வார்களாயின் அரசும், அமைச்சரவையும் எதற்கு?. அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தூங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் பட்டினியாலும் மக்கள் சாகும் நிலை தோன்றும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு விலைகளில் சீனி விற்பனை செய்யப்படுவது எவ்வாறு? வரிகுறைப்பின்போது இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விலை எதற்காக சரமாரியாக அதிகரிக்கப்படுகிறது? வரிச் சலுகையின் மூலம் நுகர்வோருக்கு நன்மை கிடைத்ததா? நாட்டில் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றபோது நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை நித்திரையிலுள்ளது.



வர்த்தகர்கள் தாம் விரும்பிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்வார்களாயின் அரசாங்கமும் அமைச்சரவையும் எதற்கு? நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை எதற்கு? இவ்வாறு பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவது ஜனாதிபதிக்கும் தெரியாது என்று கூறுகின்றனர்.

தற்போது அரசாங்கமும் நிதி அமைச்சும் அதன் சகாக்களுக்கு வரிச் சலுகையை வழங்கும் தானசாலைகளாகவே உள்ளன. நாட்டில் இதே நிலைமை தொடருமாயின் கொவிட் தொற்றினால் மாத்திரமின்றி மக்கள் பட்டினியால் சாகும் நிலைமை ஏற்படும். - என்றார். (எ-இ)

# இரு பட்டக்கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு, ஓக. 31

தற்போது சேவையில் உள்ள அதிபர், ஆசிரியர் மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு இரு பட்டக்கற்கைகளை தேசிய கல்வி நிறுவகம் அறிமுகம் செய்துள்ளது

கல்வி முகாமைத்துவ முதுமாணி, கல்வி முகாமைத்துவ கல்விமாணி ஆகிய இரு பட்டக்கற்கைகளே அறிமுகம் செய்யப்பட்டன.

கற்கை நெறிகளை தொடர விரும்புவோர் தமது விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் தேசிய கல்வி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது. (ஐ -இ)

# 52 நெற்களஞ்சியங்கள் ஒரு வாரத்தில் சீல்!

கொழும்பு, ஓக. 31

நுகர்வோர் விவகார அதிகாரசபை கடந்த ஒரு வாரத்தில் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடத்திய சோதனையில் பதிவு செய்யப்படாத 52 நெற்களஞ்சியங்கள் அடையாளம் காணப்பட்டு சீல் வைக்கப்பட்டன.

இந்த 52 நெற் களஞ்சியங்களிலும் 8 ஆயிரம் மெட்ரிக்தொன் நெல் இருப்பில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கம்பஹா மற்றும் சீதுவ பகுதிகளில் உள்ள மூன்று களஞ்சியசாலைகளில் 5 ஆயிரத்து 400 மெட்ரிக் தொன் சீனி பதுக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது. களஞ்சியங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

# சட்டப் பேராளுமையை இழந்து நிற்கின்றோம்!

## கௌரிசங்கரியின் மறைவுக்கு சசிகலா ரவிராஜ் இரங்கல்

ஒரு சட்டப் பேராளுமையை நாம் இன்று இழந்து மிகுந்த துயரத்தில் நிற்கின்றோம் என்று திருமதி கௌரிசங்கரி தவராசாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார் திருமதி சசிகலா ரவிராஜ்.

கௌரிசங்கரியின் மறைவுக்கு திருமதி சசிகலா வெளியிடப்பட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது:

சட்டமேதை சகோதரி சிரேஷ்ட சட்டத்தரணி அமரர். கௌரிசங்கரி தவராசாவின் மறைவு குறித்த செய்தி, மிகுந்த அதிர்ச்சியையும், பல்வேறு உணர்வலைகளையும் எனக்கு ஏற்படுத்துகின்றது.

எனது கணவர் படுகொலை செய்யப்பட்டபோது, நான் செய்வதறியாது கலங்கி நின்ற அந்த வேளையில், முதன் முதலில் அந்த இடத்துக்கு வந்து, எனக்கு துணையாக நின்றவர்களில் சகோதரி கௌரிசங்கரியும் அவர் தம் கணவர் கே.வி.தவராசாவும் மிக முக்கியமானவர்கள்.

அரசியல்கைதிகளுக்கான அவரது பங்களிப்பு அளப்பரியது. குற்றவியல் வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, எவ்வளவு பேராளுமையோ, அதற்கு நிகராக குடியியல் வழக்குகளில் சகோதரி கௌரிசங்கரி ஒரு பேராளுமை. சட்டத்துறையில் மதியூகியாக மிளிர்ந்து பலரது வாழ்வை ஒளிரச் செய்த ஒரு பெருந்தகை. இவரது இழப்பு தமிழ்ச் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு - என்றுள்ளது. (ம)

## வவுனிக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட

# உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு நியாயவிலை கிடைக்க வேண்டும்

## அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 31

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் கடந்த சிறுபோகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்ச் செய்கையின் அறுவடைகள் நிறைவடைந் துள்ள நிலையில் நியாயமான விலையில் தானியங்களை விற்பனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வவுனிக்குளச் சிறுபோகச் செய்கைத் திட்டத்தில் நெற்செய்கைக்கு அப்பால் 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டு, குறித்த செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட்டனர். தற்போது அறுவடைகள் முடிவடைந்த நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உழுந்து, பயறு, எள்ளு போன்ற தானியங்களை நியாய விலையில் விற்பனை செய்வதற்கு மாவட்டச்செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்படும் போது அப்பொதிகளில் நியாயவிலைகளில் வவுனிக்குளத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உழுந்து, பயறு, எள்ளு என்பனவற்றை உள்ளடக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நெல்லை வவுனிக்குளத்தில் உடனடியாக விற்பனை செய்கின்ற போதிலும் பெறுமதியான உப உணவுத் தானியங்களுக்கு நியாய விலை கிடைப்பதில்லை. எனவே சம்மம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனாத் தொற்றால் இறந்த

# வறுமைக்குட்பட்டவரின் சடலத்தை எரிப்பதற்குக் கட்டணம் இல்லை!

## வவுனியா நகரசபை தவிசாளர் தெரிவிப்பு



வவுனியா, ஓக. 31

**கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களின் சடலங்களை வவுனியா மின் மயானத்தில் எரியூட்டுவதற்கு எவ்விதக் கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்று வவுனியா நகர சபைத் தவிசாளர் கௌதமன் தெரிவித்தார்.**

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொரோனாத் தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பூந்தோட்டம் மின் மயானத்தில் எரியூட்டப்பட்டு வருகின்றது. இந்த எரியூட்டல் நடவடிக்கைக்கு இது வரை கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே, கொரோனாவால் இறப்பவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாக இருந்தால் இந்த எரியூட்டல் செயற்பாட்டுக்கு கட்டணம் அறவிடப்பபாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குறித்த சலுகையைப் பெறவேண்டுமாயின், இறந்தவர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர் என்று கிராம அலுவலரால் கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா இறப்புகள் அதிகரித்துள்ள நிலையில் இறந்த உடல்களை எரிப்பதற்கு சிலமணி நேரம் தேவைப்படுகின்றது என்றும், ஒரு உடலை எரித்து இரண்டாவது உடலை எரிப்பதற்கு இடையில் வெப்பம் தணியவிட ஒருசில மணிநேரம் தேவைப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-110)

## வீட்டின் சுவர் வீழ்ந்து சிறுவன் பரிதாபப் பலி

கொழும்பு, ஓக. 31

தர்கா டவுன், வெலிப்பிட்டிய எஸ். எம் வீதி பகுதியில் கட்டப்பட்டு வரும் வீட்டின் சுவர் விழுந்து 9 வயது மாணவன் பரிதாபமாக உயிரிழந்தார்.

மொஹமட் ரிஸ்லான் மொஹமட் அஸ்ஜத் என்ற மாணவனே உயிரிழந்தவர். தனது இரண்டு தம்பிகள் மற்றும் மூத்த சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்த இடர் இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம)



## அரிசி ஏற்றிச்சென்ற லொறி விபத்துக்குள்ளானது

கொழும்பு, ஓக.31

கொழும்பிலிருந்து நுவரெலியா பகுதிக்கு அரிசி ஏற்றிச்சென்ற லொறி ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

நுவரெலியா - ஹற்றன் வீதியில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கவனவீனமே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியில் சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவர் பலத்த காயங்களுடன் டிக்கோயா ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)




## ஒன்றரை லட்சம் பைசர் தடுப்பூசிகள் நேற்று வந்தடைந்தன

கொழும்பு, ஓக. 31

ஒன்றரை லட்சம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

தடுப்பூசித் தொகுதி நேற்றுக் காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கிவ்.ஆர் 668 என்ற விமானத்தில் அதிகாலை 2.15 மணியளவில் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. (ஒ-இ)

## கொடுப்பனவை பெற முடியும்

சாவகச்சேரி, ஓக. 31

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர்களுக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனவே கொடுப்பனவைப் பெறும் முதியவர்கள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து அஞ்சல் அலுவலகங்களுக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ -9)

## ஸ்டாலின் – செந்தில் தொண்டமான் தொலைபேசியில் கலந்துரையாடல்

கொழும்பு, ஓக. 31

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவருமான செந்தில் தொண்டமான் இருவருக்கும் இடையில் தொலைபேசி வாயிலாக கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் மறுவாழ்வு மையத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியிருப்பு, உட்கட்டமைப்பு வசதிகள், புலமைப்பரிசில், சுயதொழில் மற்றும் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற நலன்புரித்திட்டங்களை முன்னெடுத்தமைக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றியை செந்தில் தொண்டமான் தெரிவித்தார். மேலும் இலங்கையில் உள்ள மலையக மக்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ம)

# உணவுப் பொதிகள் வழங்கல்

## 40 குடும்பங்களுக்கு



கிளிநொச்சி,ஓக.31

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இயக்கச்சி மற்றும் மாசார் பகுதிகளில் உள்ள 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தின் அனுசரணையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், உப தவிசாளர் கஜன் மற்றும் உறுப்பினர் றமேஸ் ஆகியோர் இந்த [illegible] களை வழங்கினர். (ஐ-13)

## 150 குடும்பங்களுக்கு




யாழ்ப்பாணம்,ஓக.31

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட அரியாலை மேற்கு மற்றும் நல்லூர் கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அரியாலை ஸ்ரீ வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் ஊடாக சுவிற்சர்லாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்ற புலம்பெயர் வாழ்[illegible] வழுத்த மரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை இந்த உதவியை வழங்கியது. ஆலய நிர்வாகத்தின் சார்பாக தலைவர் மு. ஜெஸ்லிபாலா, செயலாளர் க. சந்திரராஜா, உப செயலாளர் கா. ஜெயராசா சிங்கம் மற்றும் போசகர் மா. மனோகரநாதன் ஆகியோரும். திருப்பணிச்சபை சார்பாக கனகசபை [illegible] கோடீஸ்வரன், வி. கே. குமணன், நடேசபிள்ளை பிரதீபன் ஆகியோரும் வீடு வீடாகச் சென்று உணவுப் பொதிகளைக் கையளித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொரோனாத் தொற்றுக்குள்ளாகி

# அவசர சிகிச்சைப் பிரிவில் 186 பேர் சிகிச்சையில்!




கொழும்பு, ஓக. 31
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு இதுவரை 186 பேர் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சின் கொரோனா விவகார இணைப்பாளர், மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 27ஆம் திகதி வரை 942 கொரோனா நோயாளர்கள் ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு, குருதி அழுத்தம், இருதய நோய் மற்றும் சிறுநீரக நோய் உள்ளிட்ட நீண்டநாள் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளான 4 ஆயிரத்து 347 பேர் கொரோனாத் தொற்று ஏற்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். (கு-இ)

# ஆர்ப்பாட்டங்களில் கைதுசெய்யப்பட்ட எவருக்கும் கொரோனா இல்லை!

### முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 31**
**“ஆர்ப்பாட்டக் கொத்தணி உருவாகும், ஆசிரியர் கொத்தணி உருவாகும்” என்று அரசு அஞ்சினாலும் ஆர்ப்பாட்டங்களின்போது கைது செய்யப்பட்ட எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை - இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் புபுது ஜெகொட தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் தொடர்பான புதிய சட்டமூலத்துக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் எமது கட்சியின் நிர்வாகச் செயலாளர் சமிர கொஸ்வத்த, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் அமில சந்தீப ஆகியோர் பதுளை தல்தெனயை அண்மித்து அமைந்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும்பாரதூரமானபிரச்சினையாகும். சமீர கொஸ்வத்தவை ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதியே கைதுசெய்தனர். ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி அவரை கைதுசெய்து 24 தினங்கள் கடந்துள்ளன.

அதேபோன்று அமில சந்தீபவை அழைத்துச் சென்று பின்னர் கைது செய்தமை ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி. அவரைக் கைதுசெய்து 22 தினங்கள் ஆகின்றன. அவர் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்துள்ளார்.

இதேவேளை, வசந்த முதலிகே, ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரைக் கைதுசெய்தும் 21 தினங்கள் கடந்துள்ளன. அவரும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்துள்ளார்.

எனவே, 14 நாள்களுக்கும் அதிகமாக தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் இருந்த மூவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஆர்ப்பாட்டங்களுக்கு ஊடாகவே கொரோனா வைரஸ் பரவியதாக ஒவ்வொரு முறையும் கூறுவதற்கு அரசு முயற்சித்தது.


ஆர்ப்பாட்டங்களுக்கூடாககொரோனா பரவுகின்றது, ஆர்ப்பாட்டக் கொத்தணி உருவாகின்றது, ஆசிரியர் கொத்தணி உருவாகின்றது என்று அரசின் அமைச்சர்கள் புலம்பினர். ஆனால், ஆர்ப்பாட்டங்களின்போது கைதுசெய்யப்பட்ட ஒரு ஆர்ப்பாட்டக்காரருக்குக் கூட கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை' - என்றார். (ம-22)

# ஒப்பற்ற திறமைசாலி கௌரிசங்கரி தவராசா

### அவரின் இறப்புக் குறித்து சுவிற்சர்லாந்து தூதரகம் இரங்கல்

கொழும்பு, ஓக. 31
'சோதனை மிகுந்த வேளைகளில்கூட எவ்வித பயமுமின்றி மிகுந்த துணிவுடன் போராடிய ஓர் ஒப்பற்ற திறமைசாலியான சட்டத்தரணியை நாம் இழந்துவிட்டோம்' என்று கௌரிசங்கரி தவராசாவின் மறைவுக்கு கொழும்பிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரக முதற் செயலாளர் சிடோனியா கபிரியல் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தூதரகம் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

திருமதி கௌரிசங்கரி தவராசா, பாரபட்சமற்ற சேவையின் விசேட அம்சமாகத் திகழ்ந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய இலவசசேவை மகத்தானது. சமுதாயத்தின் அடிக்கோட்டில் இருந்த மக்களுக்காகவும் அவர்களது மனித உரிமைகளுக்காகவும் மனித சமுதாயத்துக்காகவும் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. அவரது பிரிவு சட்டத்துறைக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாகும் - என்றுள்ளது. (கு)




# 70ஆவது ஆண்டில் சு.க. குருதிக்கொடை

கொழும்பு, ஓக. 31
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கொவிட்19 பேரிடர் கால குருதிக்கொடை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடமராட்சி, உடுப்பிட்டித் தொகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது. (கு-20)





# தூசியையும் வெப்பத்தையும் தாங்கும் தாவர இனங்களை நடுமாறு பரிந்துரை

கொழும்பு, ஓக. 31
புதிய களனிப் பாலத்திட்டத்துக்குரிய பாதைகளின் இருபக்கங்களிலும் சுற்றுவட்டப் பகுதியிலும் நிலத்தை அழகுபடுத்துவதற்கு அடர்த்தியான, சூழலுக்கு ஏற்ற, தூசி மற்றும் வெப்பத்தைத் தாங்கும் தாவர இனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என்று ஆளும் தரப்பு பிரதம கொரடாவான நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையின் முதல் உயர் தொழில்நுட்ப கேபிள்கள் மூலம் நிர்மாணிக்கப்படும் புதிய களனிப் பாலத் திட்டத்தின் களனி திஸ்ஸ சுற்றுவட்டத்தை சுற்றியுள்ள பகுதிகளையும், புதிய களனிப் பாலத்தின் முடிவில் இருந்து உறுகொடவத்தை சந்தி வரையான வீதியின் இரு பக்கங்களையும் அழகுபடுத்துவதற்காக தேசிய தாவரவியல் பூங்கா அதிகாரிகளின் பரிந்துரைப்படி உகந்த தாவர இனங்களை நடுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி, தேசிய தாவரவியல் பூங்கா அதிகாரிகள் நீலோற்பலம், வாகை, மே மார, ரொபரோசியா, கஹ மார, செவ்வரத்தை, இலுப்பை மரம், நாகமரம், அலரி, மகுல் கரட, ஆல மரம் மற்றும் முருத்த ஆகியவற்றை நடுவதற்கு முன்மொழிந்துள்ளனர்.

இவ்வாறு நடும் மரங்களுக்கு தண்ணீர் வழங்குவதற்காக நிலத்தடி தானியங்கி நீர்க்குழாய் கட்டமைப்பை உருவாக்குமாறு திட்டப் பணிப்பாளருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.


செப்ரெம்பர் இறுதிக்குள் பொதுமக்கள் பாவனைக்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய களனிப் பாலத் திட்டத்தின் நிலப்பகுதியை அழகுபடுத்துவது தொடர்பில் சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டு இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யு.ஆர். பிரேமசிரி, வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் சமிந்த அதலுவகே, திட்டப் பணிப்பாளர் தர்சிக்கா ஜயசேகர உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டார்கள். மர நடுகையின் பின்னரான தோற்றத்தை காட்டும் ஒளிப்படங்களையும் அவர்கள் காட்சிப்படுத்தினர். (கு-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாரிசெல்வராஜ் படத்தில் துருவ் விக்ரம்





'பரியேறும் பெருமாள்', தனுஷ் நடித்த 'கர்ணன்' போன்ற படங்களை இயக்கி மிகப் பெரிய அளவில் ரசிகர் மத்தியில் வரவேற்பைப் பெற்றார் மாரிசெல்வராஜ். இந்த நிலையில் இவர் இயக்கும் அடுத்த படத்தில் துருவ் விக்ரம் நடிக்கவுள்ளார். இதன் ஆரம்ப கட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் படம் விளையாட்டை மையப்ப டுத்தி உருவாகவுள்ளதாகவும் கபடி வீரர் ஒருவரின் வர்ழ்க்கை வரலாறு குறித்து பேசும் படமாக அமையும் எனவும் தெரி விக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்தப் படத்துக்கு 'கபடி வீரன்' என தலைப்பு இட முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அன்று ஆப்கான் மந்திரி... இன்று 'பீட்சா' டெலிவரி நபர்




அண்மை நாள்களாக சோகச் செய்திகளையும், துயர தகவல்களையுமே தந்துகொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் இருந்து இன்னொரு வித்தியாச செய்தி. வெளிநாட்டுக்குத் தப்பியோடிய ஜனாதிபதி அஷ்ரப் கனி அரசில் மந்திரியாக பதவி வகித்த சையத் அகமது ஷா சதாத், தற்போது ஜெர்மனி நகரம் ஒன்றில் பீட்சா டெலிவரி நபராக வேலை பார்க்கிறார்.

கடந்த 2018ஆம் ஆண்டு அஷ்ரப் கனியின் மந்திரிசபையில் சதாத் இணைந்தார். தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப மந்திரியாக பதவி வகித்த அவர், பின்னர் அப்பொறுப்பில் இருந்து விலகினார்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் ஜெர்மனியின் லீப்சிக் நகருக்கு இடம் பெயர்ந்த சதாத், தற்போது அங்கு பீட்சா டெலிவரி நபராக பணியாற்றுகிறார். பீட்சா டெலிவரி பையுடன் அவர் சைக்கிள் ஓட்டும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி கவனம் பெற்றிருக்கின்றன.

தகவல் தொடர்புத்துறை மந்திரியாக செயல்பட்டு தற்போது உணவு டெலிவரி வேலை செய்வது குறித்து கருத்து தெரிவித்துள்ள சையது சதாத், இதில் தனக்கு குற்ற உணர்ச்சியாக எதுவும் இல்லை' என்றார்.



# உன்னை நேசி...

தன்னால் எதுவும் இயலாதென்று தன்னைத்தானே தவறான சுயமதிப்பீடு செய்து, ஒரு வட்டத்துக்குள் வாழ்பவர்கள்தான் ஏராளம். ஏன் அவ்வாறானதொரு சிந்தனை? எமக்குள் எங்கேனும் ஒரு மூலையில் நமக்கான திறமை ஒளிந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்டுபிடித்து வெளிக்கொண்டுவர வேண்டியது நமது பொறுப்பே.

மற்றவர்களை பற்றி எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது சிலருக்கு.

அதை விடுத்து, 'என்னால் என்ன முடியும்' என்று எப்போது நாம் சிந்திக்கத் தொடங்குகிறோமோ, அப்போது தான் நாம் முழுமையடைவோம்.

நமக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதை வைத்து சந்தோஷத்துடனும் நேசித்தும் வாழ கற்றுக் கொண்டால், எந்தப் பிரச்சினையும் இல்லை. முதலில் உங்களை நீங்கள் நேசிக்கவேண்டும். உங்களை நீங்கள் நேசிப்பதுதான் உலகில் மிக உன்னதமான நேசம்!

## twitter

பா சி ரா@

வாழ்க்கையில் உயரும் வரை காதைப் பொத்திக் கொள்ளுங்கள்..!!

உயர்ந்த பிறகு வாயைப்பொத்திக் கொள்ளுங்கள்...!!*_









# இன்றைய நாள்

**மேடம்:** அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக இருக்கும். பொறுப்புகள் கூடும். திறமை வெளிப்படும். பொறுமை அதிகரிக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**இடபம்:** விடாமுயற்சி செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். எடுத்துக் கொண்ட விஷயங்களை திறம்பட செய்வீர்கள். புண்ணியச் செயல்களில் ஈடுபட்டு திருப்தி அடைவீர்கள்.

**மிதுனம்:** சாதகமான பலன் கிடைப்பதற்கு சற்று உழைப்பீர்கள். மனதில் தெளிவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் பெறும். முயற்சித்தவை சிறு தாமதத்துக்குப் பின் நல்ல முறையில் நடக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். பெரியோரால் நன்மைகள் ஏற்படும். நன்றி உணர்ச்சி வெளிப்படும். பிரியமானவர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். கவலை குறையும்.

**சிம்மம்:** நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை ஒன்று தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய விஷயத்தில் இருந்த தாமதம் நீங்கும். பணியாளர்களுக்கு புதிய பதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது

**கன்னி:** உங்கள் மேல் மற்றவர்கள் கொண்ட மரியாதை உயரும்.. திறமை வெளிப்படுவதால் செயல்களில் வெற்றி உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

**துலாம்:** மனதில் இருந்த வீண் படபடப்பு அகலும். முயற்சியில் வெல்வீர்கள். எதிலும் கவனமாகச் செயல்படுவீர்கள். கருணை அதிகரிக்கும். ஊக்கமுடன் உழைப்பீர்கள்.

**விருச்சிகம்:** பேச்சின் இனிமை, சாதுரியம் இவற்றால் வெல்வீர்கள். அமைதியாக இருப்பது நல்லது. தாயாரால் நன்மை உண்டு. கண்டிப்புடன் செயல்படுவீர்கள்.

**தனுசு:** புண்ணியச் செயலில் நாட்டம் அதிகரிக்கும். படபடப்பு வேண்டாம், தந்தையுடன் அனுசரித்து செல்லுங்கள். நீங்கள் சொல்வது பலிக்கும். அமைதியாகச் செயல்படுவீர்கள்.

**மகரம்:** நிதானமான நன்மைகள் உண்டு. மனதில் பரபரப்பு கூடும். திடீரென்று வாகனம் வாங்குவீர்கள். கலையார்வம் கூடும். உடல் நலம் பாதிக்காமல் கவனம் தேவை.

**கும்பம்:** வழக்கத்தைவிட கடினமாக பணியாற்ற வேண்டி வரும். வருமானத்தில் தாமதம் இருக்கலாம். வருத்தங்கள் நீங்கும்.

**மீனம்:** கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். மகிழ்ச்சி கூடும். வீண் அலைச்சல் உண்டாகலாம். பொறுமை தேவை. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் நிலைகொண்ட அமெ. படைகளின் இறுதிநாள் இன்று





**காபூல், ஓக. 31**

**ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டிய இறுதிநாள் இன்றாகும். கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வந்த அமெரிக்காவின் நடவடிக்கைகள் இன்றுடன் முடிவுக்கு வருகின்றன. இன்று பின்னிரவு அமெரிக்க இறுதி இராணுவச் சிப்பாய்களு டன் அமெரிக்காவின் இறுதி விமானம் காபூலில் இருந்து புறப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களும் இராணுவத் தலைமையகமான பென்டகனும் அல் குவைதா பயங்கரவாத அமைப்பால் தாக்கப்பட்டன. இதில் பலர் கொல்லப்பட்டனர். பல பில்லியன் டொலர் பொருளாதார இழப்பை அமெரிக்கா சந்தித்தது. இந்தத் தாக்குதலின் பின்னர் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை என்பதை ஆரம்பித்தது.

இதன் ஒரு பகுதியாக அல் குவைதா அமைப்புக்கு தலிபான்கள்தான் ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டி தலிபான்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டது.

2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த அமெரிக்கா தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றியது.

இதன் பின்னர் கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை எடுத்த போதிலும் அந்த அமைப்பை அழிக்கவோ அல்லது பலம்குன்ற வைக்கவோ முடியவில்லை. 2,000 பில்லியன் அமெரிக்க டொலர் இந்தப் போரில் அமெரிக்கா இழந்துள்ளது. 2,500 சிப்பாய்களைப் பறிகொடுத்துள்ளது. எனினும் எந்தப் பயனும் இல்லை.

**அமெரிக்கா - தலிபான் இடையிலான ஒப்பந்தம்**

இதையடுத்து அமெரிக்காவுக்கும் தலிபானுக்கும் இடையில் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்படும். அதேநேரம், நாடு திரும்பும் அமெரிக்கப் படை மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தக்கூடாது என்பதாக அமைந்தது.

இதன்படி அமெரிக்கப் படைகள் நாடு திரும்ப ஆரம்பித்த பின்னர் மிகத் துரிதமாக முன்னேறிவந்த தலிபான்கள் தற்போது ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

எதிர்பார்த்ததை விட மிக வேகமாக தலிபான்களிடம் ஆப்கானிஸ்தான் வீழ்ந்தது.

இத்தகையதொரு பின்னணியிலேயே இன்று ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படையின் இறுதி விமானம் தாயகம் திரும்புகின்றது. (ம)

## காபூல் விமான நிலையத்தின் மீது சரமாரியான ரொக்கெட் தாக்குதல்

காபூல், ஓக. 31

காபூல் விமான நிலையத்தில் இருந்து அமெரிக்கப் படையினர் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிவரும் நிலையில், அவர்களைக் குறிவைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல்தாரிகள் சரமாரியான ரொக்கெட் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கப் படைகள் இன்று பின்னிரவுடன் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும் என்பது ஒப்பந்தம். இதனால் கொஞ்சம் கொஞ்சமாக படைகளை திரும்பப் பெறும் நடவடிக்கைகளை அமெரிக்கா தற்போது முன்னெடுத்துள்ளது. இந்த நிலையிலேயே அவ்வாறு வெளியேறும் அமெரிக்க இராணுவத்தினரை இலக்குவைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

கிட்டத்தட்ட ஐந்துக்கும் மேற்பட்ட ரொக்கெட்களால் நேற்றும் காபூல் விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் அத்தனை ரொக்கெட்களையும் அமெரிக்கா இடைமறித்து அழித்தது. (ம)





## தற்கொலைத் தாக்குதலை முறியடித்தது அமெரிக்கா!

### காபூலில் உச்சக்கட்டப் பதற்றம்

காபூல், ஓக. 31

அமெரிக்கப் படைகளை அழிக்கும் நோக்குடன் காபூல் விமான நிலையத்தை நெருங்கிய வெடிகுண்டு நிரப்பப்பட்ட காரை இடைநடுவில் வைத்து அழித்தது அமெரிக்கா.


காபூலில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிவரும் நிலையில் அங்கு தற்போது உச்சக்கட்டப் பதற்றம் சூழ்ந்துள்ளது. அமெரிக்கப் படையினரைக் கொன்றுவிட வேண்டும் என்று பல்வேறு பயங்கரவாதக் குழுவினரும் காபூல் விமான நிலையத்தை இலக்கு வைக்கின்றனர். கடந்த வாரம் நடந்த தற்கொலைத் தாக்குதலில்கூட 13 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காருடன் அமெரிக்க இராணுவத்தினரின் நிலைகளை நெருங்கிய தற்கொலைதாரியை இனங்கண்ட அமெரிக்க கண்காணிப்பு ட்ரோன், குறித்த கார் மீது துல்லியத் தாக்குதல் நடத்தி பெரும் அசம்பாவிதத்தை முறியடித்துள்ளது.

இதனால் காபூலில் தொடர்ந்தும் அச்சமான சூழ்நிலை நிலவுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வந்தமாக காணாமல் ஆக்கியமையும் இனப்படுகொலையின் ஓர் அங்கமே!



**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நாள் நேற்றாகும். அதனையொட்டி நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டுள்ள அறிக்கை முழுமையாகத் தரப்படுகின்றது.**

இலங்கைத்தீவில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு சிறிலங்கா அரசுப் படைகளால் கடத்திச் செல்லப்பட்ட, சிறிலங்கா இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட அன்புக்குரியவர்களைத் தேடியலையும் ஆயிரக்கணக்கான தாய்மார்களுக்கு, குடும்பங்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

2009ஆம் ஆண்டு மே மாதம், இறுதிப்போரின் முடிவில் சிறிலங்கா இராணுவத்தினால் வலிந்து கொண்டு செல்லப்பட்டு காணாமற்போன தமிழர்கள் இன்று வரை கணக்கெடுக்கப்படவே இல்லை. கொண்டு செல்லப்பட்டவர்கள் சிறிலங்காவின் இரகசியத் தடுப்புக்களில் கடும் சித்திரவதைக்கும், பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. 'காணாமற்போனவர்கள்' தமிழ் இளம் யுவதிகளே பெரும்பாலனவர்கள். இவர்களில் வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் ஜோசப் என்ற கத்தோலிக்க குரு ஒருவரும் அடங்குகின்றார். ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர மொன்றின்படி வலிந்தோ தன்விருப்பமின்றியோ காணாமலாக்கும் செயல்களில் சிறிலங்காவே உலகில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. வலிந்து காணாமலாக்கிய செயல்களுக்குப் பொறுப்பான சிறிலங்கா படைத் தளபதிகளையும், அரசியல் தலைவர்களையும் கூண்டிலேற்றாது பாதுகாத்துக் கொள்வதிலேயே போருக்குப் பிந்திய ஆட்சியாளர்கள் கவனமாக இருந்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் பார்வையில், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சிறிலங்கா அரசின் அணுகுமுறையானது ஈழத் தமிழர்களுக்கு எதிரான தன் இனவழிப்புச் செயல்களுக்கும் மானிட விரோதக் குற்றங்களுக்கும் பொறுப்புக்கூறுவதில் அதற்குள்ள அலட்சியத்தையே அனைத்து வகையிலும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

ஆகவே, வலிந்து காணாமலாக்கிய குற்றங்கள் உள்ளிட்ட இனவழிப்புச் செயல்கள் குறித்தும் மானிட விரோதக் குற்றங்கள் குறித்தும் சர்வதேச விசாரணை வேண்டும் என்பதோடு, குற்றவாளிகள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்பது நாடுகடந்த தமிழீழ அரசின் கோரிக்கையாகும்.

சிறிலங்கா அரச நிறுவனங்களிலும் அரசியல் தளத்திலும் இனநாயகம் ஊன்றிப் படர்ந்து ஊடாடி நிற்கும் நிலையில், அவற்றால் வலிந்து காணாமலாக்கிய குற்றங்களால் துயரப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முடியவில்லை என்பது வெள்ளிடைமலை.

2009ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தில் இருந்த மஹிந்த ராஜபக்ச அரசானது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான அனைத்து புலனாய்வு விசாரணை முயற்சிகளையும் எதிர்த்து நின்றது. தொடர்ந்து ஆட்சிக்கு மைத்திரிபால சிறிசேனா, காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களையும் மனைவிமார்ளையும் சந்தித்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் கவனிப்பதாக உறுதியும் அளித்தார். ஆனால் ஒன்றுமே செய்யவில்லை. அடுத்து வந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காணாமற்போன அனைவரும் இறந்து விட்டார்கள் என்றாரே தவிர, நீதிக்கான பொறுப்புக்கூறலுக்கு வழிசொல்லவில்லை. இறுதியில் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தி லிருந்தும் விலகிக் கொண்டார். அதாவது சிறிலங்கா அரசே தமிழர்களுக்கு நீதி மறுத்துள்ளது.

இத்தனை ஆண்டுகளும் சிறிலங்காவின் தலைவர்கள்

(அ) சட்டச் செயல்வழிகளை மறித்துள்ளார்கள்

(ஆ) தாங்கள் கடைப்பிடிக்க ஒப்புக்கொண்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை மீறியுள்ளார்கள்

(இ) காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருடன் இணைந்து பணியாற்றிய செயற்பாட்டாளர்களை மிரட்டி அச்சுறுத்தியுள்ளார்கள்

(உ) குற்றவாளிகளைக் குற்றவிளைவுகளிலிருந்து பாதுகாத்துக் கொண்டே சர்வதேச உடன்படிக்கைகளில் ஒப்பமிடுவதன் மூலம் வலிந்து காணாமலாக்கும் செயல்களை ஒழிக்கப் பாடுபடுவது போல் நாடகமாடியுள்ளார்கள்.

2015ஆம் ஆண்டு செப்ரெம்பரில் அப்போதிருந்த சிறிலங்கா அரசு ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையூடாக சர்வதேச சமூகம் கொண்டுவந்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளைச் செயலாக்க ஒப்புக்கொண்டிருந்தது. காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான உண்மைகளை வெளிக்கொணர புலனாய்வு செய்யும் வழிவகைகளைச் செயலாக்கத் தொடங்குவதாக சிறிலங்கா அரசு கூறிய போதிலும் அது நிறுவிய கருவிகளிலிருந்து காணாமலாக்கப்பட்டுப் பிழைத்து மீண்டு வந்தவர்களின் தேவைகளைச் செய்துகொடுக்காமல் சர்வதேச சமுதாயத்தைக் குளிர்விப்பதில் மட்டுமே அது அக்கறை கொண்டிருப்பது தெரிந்து விட்டது. அது வெறும் பொய்மையே என்று தெரிந்து விட்டது.

ஐ.நாவின் 30/1 தீர்மானத்தை ஒட்டி அனைத்துலக வல்லுநர்களைக் கொண்டு காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசு சர்வதேச சமூகத்தை கேலி செய்து பழிப்புக் காட்டுவது போல் உள்நாட்டுச் செயற்பாட்டாளர்களைக் கொண்டு மட்டும் காணாமற்போனோர் அலுவலகம் ஒன்றை அமைத்தது. சிறிலங்கா அரசைப் பகைத்துக் கொள்ள விரும்பாத சர்வதேச அரசுகள், தமது புவிசார் அரசியல் காரணங்களால் இந்த ஏற்பாட்டை அணைத்துக் கொண்டன என்பது வருத்தத்திற்குரியது

காணாமாலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் காணாமற்போனோர் அலுவலகத்திடம் கூறியது என்னவென்றால், உள்நாட்டுப் போரின் முடிவில் சிறிலங்கப்படையிடம் சரணடைந்து காணாமற்போனவர்களில் ஐந்தே ஐந்து பேர் என்னவானார்கள் என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால் நாங்கள் உங்களை நம்பி இணைந்து பாடுபட அணியமாய் உள்ளோம் என்பதே. ஆனால் இதைக் கூட அவர்களால் செய்ய முடியவில்லை. இந்த அலுவலகம் தன் ஐந்தாண்டுக்கால வாழ்வில் காணாமற்போன சிலரின் பெயர்களை வெளியிட்டதற்கு மேல், தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட நிகழ்வுகளை கருத்தூன்றிப் புலனாய்வு செய்யவே இல்லை.


சிறிலங்காவின் இப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அண்மையில் வழங்கிய நியமனங்கள், காணாமற்போனோர் அலுவலகத்தின் தற்சார்பை மேலும் சீர்குலைத்துள்ளன. இவ்வாறு அமர்த்தப்பட்டிருப்பவர்களில் ஒருவர் செய்தியாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையில் சாட்சியத்தை அழித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி ஜெயந்த விக்ரமரத்னா. இன்னொருவர் குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்களை விடுவிக்க முற்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் உபாலி அபயரத்னா.

முந்தைய ஆட்சியில் தொடுக்கப்பெற்ற சில குற்ற வழக்காடல்களையும் கோத்தாபய ராஜபக்ச முடக்க முற்பட்டுள்ளார். இந்த மாதம் முற்பகுதியில் 2008, 2009 ஆண்டுகளில் பெரியோரும் சிறாருமான 11 பேர் காணாமலாக்கப்பட்டது தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணகொடாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தலைமை அரசுச் சட்டத்தரணி கைவிட்டுக் கொண்டார். முல்லைத்தீவு நீதிமன்றங்களில் துணிச்சலான குடும்பங்கள் தாக்கல் செய்த ஆள்கொணர்வு வழக்குகளை மையப்படுத்தியே சட்டச் செயல்வழிகள் அமைந்துள்ளன.

முறைப்பாட்டாளர்களில் பெரும்பாலார் 2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதிப்போரின் போது சிறிலங்கா இராணுவத்திடம் தமது அன்புக்குரியவர்களை விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் ஒப்படைக்கட்டவர்களாகும்.

ஆனால் அவர்களின் அன்புக்குரியவர்கள் காணாமல் போய் விட்டார்கள். சிறிலங்கா படையின் சட்டத்தரணிகள் இறுதியில் நீதிமன்றத்துக்கு வர இணங்கிய போது முறைப்பாட்டாளர்களுக்காக முன்னின்ற சட்டத்தரணிகள் குறுக்கு விசாரணையின் ஊடாக 2009 மே மாதம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் பட்டியல் அவர்களிடம் இருப்பதை வேறு வழியின்றி ஒப்புக் கொள்ளும் நிலைக்குத் தள்ளி விட்டார்கள். அதாவது அந்தப் பட்டியல்களில் பெயர் இடம்பெற்றிருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்று பொருள். ஆனால் சிறிலங்கப் படை பட்டியல் தர வேண்டும் என்று நீதியரசர் ஆணையிட்ட போதிலும் சிறிலங்கா படை முட்டுக்கட்டை இட்டதால் வழக்கு முடங்கிவிட்டது. காணாமலாக்கும் குற்றங்கள் எளிதில் நடைபெறத் துணை செய்த கருவிகளில் ஒன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகும். இந்தச் சட்டத்தை நீக்கம் செய்யும்படி தமிழர்களும் உள்நாட்டு, சர்வதேச மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களும், சர்வதேச அரசுகளும் கோரியுள்ள போதிலும், அப்படி எதுவும் நடக்கவில்லை. சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் இக்கோரிக்கையை முன்வைத்திருந்தது.

வலிந்து காணாமலாக்கலுக்கு இரையானவர்களை ஆவணமாக்கும் நோக்கில் 'உங்களை நாங்கள் மறவோம்' எனும் இணையத்தளத்தை 2018ஆம் ஆண்டு நாடு கடந்த தமிழீழ அரசு அறிமுகம் செய்திருந்தது. இந்த இணையத்தளத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவர்கள் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்த வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**UNIVERSITY COLLEGE OF JAFFNA**
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
STATE MINISTRY OF SKILLS DEVELOPMENT, VOCATIONAL TRAINING, RESEARCH & INNOVATIONS

**VACANCIES**

TVEC Reg No: P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna

1. LECTURER (PROBATIONARY) IN COSMETOLOGY
2. DEMONSTRATOR IN BUILDING SERVICES TECHNOLOGY

Closing Date: 15.09.2021
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

Assistant Registrar
University College of Jaffna

31.08.2021


## 45ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 13.03.1944 | விண்ணில் 18.07.2021

### திருமதி சிவபாக்கியம் நடராசா

அல்வின் வீதி, காரைநகர்.

ஆசிரியையே! – எங்கள் ஆங்கில அகிலம்
ஆண்ட பெருங்கடலே!
அனைவர் மனங்களிலும் அகலா கண்ணீர் நதி
ஆசிரியை உம்மாலே!...

தாம் இல்லா நிலை நம்மை வாட்டி எடுத்தாலும்
தாம் தந்த கல்வி தரணி முழுவதிலும்
தக்க பயனைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்க
தங்கள் வாழ்வு தழைத்து நிலைக்கும்
தம் மாணவ சந்ததியின் சரித்திரங்கள் அவற்றிலே!...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரவீ, ராஜினி
பழைய மாணவர்கள்
ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை

காரைநகர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 03 . 1946 | உதிர்வு 30 . 08 . 2021

### திருமதி சுப்ரமணியம் பரமேஸ்வரி

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், அளவெட்டி, இராமலிங்கம் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்ரமணியம் பரமேஸ்வரி (திரவியம்) அவர்கள் நேற்று (30.08.2021) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னப்பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், சுப்ரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், கீரீசன் (முகாமையாளர்-சிங்கர் பிளஸ், யாழ்ப்பாணம்), தமணிகை (UK), தவலாங்கி (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாசினி, பிரதாபன் (UK), றூபன் (கணக்கு உதவியாளர் R.D.A) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வைகரி, கிரிஷ்வீன், ஆதிரை, ருக்ஷவி, பிரனீத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.94, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, நல்லூர்.
077 3910 445

தகவல்:
குடும்பத்தினர்.

## மற்றொரு...

பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த விடயத்தை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் துறையின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றரில், தென் ஆபிரிக்காவின் தொற்றுநோய் தொடர்பாக ஆராயும் ஆராய்ச்சி நிறுவனம் இந்த புதிய பிறழ்வு தொடர்பில் அறிவித்துள்ளது. தொற்று நோய்களின் போது இவ்வாறு புதிய பிறழ்வுகள் வெளிப்படுவது இயல்பானது. இந்த பிறழ்வின் சேர்க்கைகள் ஏனைய வைரஸின் பாகங்களைவிட மாற்றமடைந்ததாகும். C.1.2. என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பிறழ்வு N440K மற்றும் Y449H என்ற மாற்றங்களையும் காண்பிப்பதாக மேற்கூறப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக வழங்கப்படும் தடுப்பூசி மனிதர்களின் உடலில் ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தியையும் மீறி செயற்படக் கூடியது என்று குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும்
**திருமதி கலைமகள் உதயகுமார்**
அவர்களின் தந்தையார்

### சம்பந்தர் இராசரத்தினம்

அவர்கள் 28.08.2021 அன்று மரணமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்

## 8ஆம் ஆண்டு நீங்கா நினைவில்



தோற்றம் 08 . 08 . 1933 | மறைவு 29 . 08 . 2013

### அமரர் சண்முகம் தணிகாசலம் (J.P)

திதி:அபரபக்க நவமி

அமைதியின் உருவமாக, அடக்கத்தின் இருப்பிடமாக
பண்பின் பெருந்தகையாக, பாசத்தின் உறைவிடமாக
எம்மத்தியில் அன்பு ஒளியாக இருந்த அப்பாவே
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து
எட்டு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறையப் போவதில்லை.

தணிகை மஹால்
151/1 (528) பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### தம்பிப்பிள்ளை சித்திரவேல்

வேலணையை பிறப்பிடமாகவும் குருநாகலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சித்திரவேல் அவர்கள் 28.08.2021 அன்று குருநாகலில் காலமானார்.
அன்னார் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் நீண்டகாலமாக நிறைவேற்றுப் பணியாளராக கடமையாற்றினார். வடக்கு கிழக்கில் இடர்காலத்தில் சிறப்பாகச் சேவையாற்றினார். Care கெயார் நிறுவனத்தில் மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான பணிப்பாளராகவும் கடமையாற்றினார். டெனிஷ் செஞ்சிலுவை சங்கம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகிய நிறுவனங்களிலும் இணைப்பாளராகக் கடமையாற்றினார். அவரது சேவை தமிழ் மக்களால் எந்நாளும் மறக்க முடியாது. இலங்கைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர் ஆரம்பத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி வகித்தார். அவரது இழப்பால் கவலையுறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆன்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**தலைவர், நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்-யாழ் கிளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் காலமானார்



வவுனியா, ஓக. 31
இலங்கையின் சிரேஸ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான முத்துசிவன் என்றழைக்கப்படும் முத்தையா சிவலிங்கம் சுகவீனம் காரணமாக நேற்றுக் காலமானார்.
கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டுக்குச் சென்றிருந்தார். இந்தநிலையில், நேற்றுக்காலை அவர் காலமானார். 78 வயதான அவர் நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வீரகேசரி, உதயன் போன்ற பத்திரிகைகளிலும் பணியாற்றி, எழுத்துத் துறையிலும் தனது பங்களிப்பை செலுத்தியிருந்தார்.. (த-110)

# கொரோனாச் சாவுகளைக் குறைக்க கட்டுப்பாட்டை இறுக்கவேண்டும்

## மருத்துவ நிபுணர்களின் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 31
அதிகரித்துவரும் கொவிட் உயிரிழப்புகளை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான பயணக்கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும். தற்போதைய கட்டுப்பாடு போதுமானதாக இல்லை என விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்ணாந்து தெரிவித்தார்.
நாடு முடக்கப்படுள்ள நிலைமையிலும் கொவிட் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையில் கொவிட் நோயாளர்கள் மற்றும் கொவிட்டால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் அதிகரித்த வீதத்தையே காட்டுகின்றது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் கொள்ள கடுமையான பயணக்கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.
நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றாலும், பொதுமக்கள் இது தொடர்பாக எந்த சிந்தனையும் இல்லாமல் செயற்படுகின்றனர் என்பதையே காண்கின்றோம். இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும். - என்றார். (த-இ)

# பளிச் ஷைன்

**முகம்**
உங்கள் முகத்தை சுத்தம் செய்து அல்ககோல் இல்லாத டோனரை கன்னங்கள் மற்றும் முகத்தின் டிஸோனில் பூசுங்கள். கிரீமை பூசி சருமத்தைத் தயார் செய்யுங்கள். ஒளிரும் பவுண்டேஷன் பயன்படுத்தி ப்ளெண்ட் செய்யுங்கள். சில நிமிடங்கள் கழித்து, பவுடரை பயன்படுத்தி பைனல் டச் செய்யவும்.

**கண்கள்**
கண்களை பிரவுன் நிற ஐ பென்சிலைப் பயன்படுத்தி அவுட்லைன் செய்யவும். பளிச் சென்ற நிற கிரீம் பேஸ்டு ஐஷேடோவைப் பூச ஆங்குலர் பிரஷைப் பயன்படுத்தவும். விளிம்புகள் வரை பிளெண்ட் செய்யவும். மேல் இமையில் பிரவுன் ஐ லைனர் பயன்படுத்தவும். மேல் மற்றும் கீழ் இமைகளில் மஸ்காராவைப் பயன்படுத்தவும்.

**உதடுகள்**
உதடுகளில் லிப் பாம் பூசவும். கூடுதல் பாமை துடைத்து எடுத்து விட்டு, லிப் லைனரால், உதட்டின் வெளி ஓரங்களை லைன் செய்யவும். உதட்டை பளிச்சென்ற நிறத்தால் நிரப்பி, கலரை பிரஷால் பூசுவதால், கச்சிதமாகப் பூச முடியும்.

**கன்னங்கள்**
கன்னக் கதுப்புகளை எடுப்பாக காண்பிக்க, பிளஷைத் தேர்ந்தெடுக்கவும். பிளஷுக்கு மேலே சற்று ஹைலைட்டர் பூசவும்.






சூப் தயாரிக்கும்போது நார்ச்சத்து அதிகம் உள்ள காய்கறிகளை பயன்படுத்துவது மிகவும் நல்லது. இதில் எந்தெந்த சூப் உடலுக்கு நல்லது என்பதை பார்க்கலாம்.
தக்காளியில் விற்றமின் சி, பீட்டா கரோட்டீன் போன்ற ஊட்டச் சத்துக்கள் இருப்பதுடன் கொழுப்பு மற்றும் கலோரிகள் குறைந்த அளவில் மட்டுமே இருப்பதால் உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் தக்காளி சூப்பை எடுத்துக் கொள்ளலாம்.
கீரை, ப்ரோக்கோலி, கரட், பட்டாணி, குடை மிளகாய், பீன்ஸ் போன்ற பல்வேறு காய்கறிகளை கொண்டு தயார் செய்யப்படும் மரக்கறி சூப்பில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இது, உங்கள் உடல் எடையை வெகுவாக குறைக்கும்.
சிக்கன் சூப்பில் புரோட்டீன், கார்போஹைட்ரேட் குறைந்தளவு கலோரி மற்றும் கொழுப்புகள் இருந்தாலும் உடல் எடையை குறைக்க உதவுகிறது. இது, நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் அழற்சியை குறைக்கிறது.
காளான் சூப்பில் புரோட்டீன், நார்ச்சத்துகள் மற்றும் ஏராளமான ஊட்டச்சத்துக்களுடன் குறைந்தளவு கலோரிகள் இருப்பதால் உடலுக்குத் தேவையான ஆற்றலை தருகிறது. மேலும், இது உடல் எடை குறைப்புக்கும் உதவுகிறது.
காலிபிளவர் சூப்பில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள், குறைந்த அளவு கலோரிகள் உள்ளன.

# வெயிலில் செல்லும் போது சருமம் எரிகிறதா?

சாதாரண வெயிலில் செல்லும் போது சிலருக்கு சருமம் பயங்கரமாக எரியும். அதில் கோடையில் என்றால் தாங்க முடியாத அளவில் எரிச்சலை சந்திக்க நேரிடும், சருமத்தின் நிறம் கருமையாகும். இதனைத் தவிர்க்க வேண்டுமென்றால், கோடையில் சருமத்தை குளிர்ச்சியுடன் வைத்துக் கொள்ளும் பொருள்களைக் கொண்டு சருமத்தைப் பராமரிக்க வேண்டும்.

**வெள்ளரிக்காய் மற்றும் எலுமிச்சை**
வெள்ளரிக்காயை அரைத்து, அத்துடன் சிறிது எலுமிச்சை சாறு, 1 சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். முக்கியமாக இந்த ஃபேஸ் பேக் எண்ணெய் பசை சருமத்தினருக்கான ஏற்ற ஒன்று.

**வெள்ளரிக்காய் மற்றும் முல்தானி மெட்டி**
முல்தானி மெட்டி பொடியில் வெள்ளரிக்காய் சாறு மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்ததும், குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ , முகத்தில் உள்ள பருக்கள் அனைத்தும் நீங்கும்.

**வெள்ளரிக்காய் மற்றும் தேன்**
வெள்ளரிக்காயை அரைத்து; அத்துடன் ஓட்ஸ் பொடி மற்றும் தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து , பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும் . இந்த ஃபேஸ் பேக் சருமத்தில் நீர் சத்தை தங்க வைத்து , சருமம் வறட்சி அடைவதைத் தடுக்கும் .

**வெள்ளரிக்காய் மற்றும் அப்பிள்**
அப்பிளை அரைத்து, வெள்ளரிக்காய் சாறு கலந்து, முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து , குளிர்ச்சியான நீரால் முகத்தைக் கழுவவும். இந்த ஃபேஸ் பேக் சென்சிடிவ் சருமத்துக்கு ஏற்ற ஒன்று.

**வெள்ளரிக்காய் மற்றும் கற்றாழை**
வெள்ளரிக்காயை சாறு எடுத்து , அத்துடன் கற்றாழை சேர்த்து கலந்து , முகத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து தினமும் கழுவி வர , முகத்தில் உள்ள கருமைகள் அகலும் .

**வெள்ளரிக்காய் மற்றும் அவகோடா**
வெள்ளரிக்காயை அரைத்து , அத்துடன் அவகோடா பழத்தை சேர்த்து நன்கு கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ, முகம் புத்துணர்ச்சியுடன், வறட்சியின்றி பொலிவோடு காணப்படும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயகட்டுப்பாடும், தடுப்பூசியுமே உங்களைக் காப்பாற்றும்

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை கடந்த நிலையில், மக்களின் சுயகட்டுப்பாடும் தடுப்பூசியுமே இக்கட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு வழியை ஏற்படுத்தும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒருவார காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் வழங்கும் ஒத்துழைப்பின் மூலமே கொரோனாப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். மாவட்டத்தில் மூன்றாம் கட்ட சினோபாம் தடுப்பூசி வழங்கலின் இரண்டாவது தடுப்பூசி ஏற்றலுக்காக 2 லட்சம் சினோபாம் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா மரணங்கள் அண்மைய நாள்களாக அதிகரித்துவரும் நிலையில் தவறாது தடுப்பூசி ஏற்றலும் மக்களின் சுய கட்டுப்பாடுமே இடர்நிலைமையிலிருந்து காப்பாற்றும். தடுப்பூசி பெறாமல் வீடுகளில் தங்கியுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொடர்ந்தும் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வீடுகளில் தங்கியுள்ளவர்களின் விவரங்களை பிரதேச சுகாதார தரப்பினருக்குத் தெரியப்படுத்துங்கள். என்றார். (த-20)



## இந்தியாவுக்கான தூதுவராக பதவியேற்றார் மிலிந்த மொரகொட

கொழும்பு, ஓக. 31

இந்தியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டு, ஒரு வருடத்தின் பின்னர் பதவியைப் பொறுப்பேற்றார். மிலிந்த மொரகொட அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், மிலிந்த மொரகொட மற்றும் அவரது மனைவி ஜெனிபர் மொரகொட ஆகியோரை இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் வரவேற்றுள்ளனர். இலங்கையின் நலன்களை முன்னெடுப்பதற்கும் இலங்கை இந்திய இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் குறித்து பதவியேற்பு நிகழ்வில் மிலிந்த மொரகொட உரையாற்றியுள்ளார். (த-22)

### கொரோனாவால்...

காமத்தைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வடமராட்சியில் முதியவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 89 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சைப் பிரிவில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்த செம்பியன்பற்று மாமுனையைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதன்படி, தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

அதுமட்டுமன்றி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 241ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மற்றும் சாவகச்சேரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மேற்கொண்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளில் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நேற்று நண்பகல்வரை சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பிரதேசத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஒன்றாக அதிகரித்துள்ளது. (த-9)

### இரு...

யின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இராணுவத்தினரால் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு மற்றும் பலாலி இராணுவ கட்டளைத் தலைமை இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ-20)


## கண்ணீர் அஞ்சலி



உதிப்பு:28.12.1956 உதிர்வு:29.08.2021

எமது சங்க உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச செயலக சக கிராம அலுவலருமான திரு. பா. சுபாசன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கலைவாணி பாலசுப்பிரமணியம்**

அவர்கள் 29.08.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம், தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர்கள்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனா வைத்தியசாலையில் கதிர்இயக்க தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றும் **ஜெ.கஜன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**நாகலிங்கம் ஜெயசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம் யாழ்ப்பாணம்.**

## துயர் பகிர்கின்றோம்

எமது சங்க உறுப்பினர்
**திரு. பா. சுபாசன்** அவர்களின்
(கிராம அலுவலர் மட்டுவில் மத்தி) பாசமிகு தாயார்

**திருமதி கலைவாணி பாலசுப்பிரமணியம்**

அவர்கள் 29.08.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம் சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 28.12.1956 இறப்பு 29.08.2021

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியும் **திருமதி ஸர்மினி கணேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்.

அமரர் திருமதி

**பாலசுப்பிரமணியம் கலைவாணி**

அவர்களின் மறைவையிட்டு எமது விழிநீர் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம் யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை**

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் பொன்னையா பாலசிங்கம்**

(Retired Superientendent of Audit)



தோற்றம் 19 . 09 . 1931

மறைவு 21 . 08 . 2003

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து எம்மை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
பதினெட்டாம் ஆண்டு நினைவு நாளில் - உம்மை
நினைந்து வணங்குகின்றோம் அப்பா!

166/3, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.

## மரண அறிவித்தல்



**பாலசுப்பிரமணியம் கலைவாணி**

மட்டுவில் தெற்கு வாகையடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கலைவாணி கடந்த (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூதத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சிவரூபன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்- கொமர்ஷல் வங்கி, சாவகச்சேரி), சர்மினி (ஆசிரியர்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை), சுபாஷன் (கிராம சேவையாளர் - பிரதேச செயலகம் தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தாயும், கலைச்செல்வி, கணேஷ்வரன் (கட்டடத்திணைக்களம் - யாழ்ப்பாணம்), கயந்தி (பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சுவேத், டனுஸ்கா, கிருசிஜா, டனுஸ்கான், ரித்விதா, சஸ்விதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் [illegible] கொள்கின்றோம்.


[illegible] சந்தி, நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 03 . 01 . 1948



மறைவு 28 . 08 . 2021

## அமரர் ஆறுமுகம் பாலச்சந்திரன்

(யாழ் மாநகராட்சி மன்றம் (மின்சார சபை) களஞ்சிய அறைப் பொறுப்பாளர்)

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு!
குடும்ப உறவுகளை வேரென தாங்கினீர்களே!
மாயப் புயல் வடிவில், காலன் இன்னுயிர் பறிக்க!
சோகத்தை தந்துவிட்டு சொல்லாமல் சென்றதென்ன!
கண்களை குளமாக்க விதி செய்த விளையாட்டால்!
கதி கலங்கி நிற்கின்றோம் செய்வதறியாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்னாரின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்
(செ.இராசையா)

கைதடி வடக்கு,
கைதடி.

University College of Jaffna

University of Vocational Technology

State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovations

## Applications are open for the following Courses

- Construction Technology
- Building Services Technology
- Mechatronics Technology
- Production Technology
- Farm Machinery Technology
- Food Technology
- Hospitality Management
- Cosmetology ( Beauty Culture )

Closing Date 17th September 2021

Accreditation QMS TVEC Approved Registration

*Entry Qualifications*
GCE A/L qualified or NVQ 4

*Career Path :* A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

*For more details*

University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

**Application forms can be dowloaded from the website**

Please pay the application Fee Rs. 500 to this account no
(Peoples Bank 162 - 100100045947) and attach the bank receipt with application

# மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 03 . 1950



இறப்பு 30 . 08 . 2021

## சுலோசனா சண்முகவடிவேல்

(லலி)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் சிட்னி, அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுலோசனா சண்முகவடிவேல் (லலி) நேற்று (30.08.2021) திங்கட்கிழமை சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகவடிவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடனசிகாமணி, மகேஸ்வரி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பார்வதிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், சுகன்யா, சுரேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னகரன், கவிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகுல் ஆதித்தன், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரஞ்சனி, ஜமுனா, குலேந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகாம சுந்தரி, கனகம்மா, தங்கத்திரவியம், சந்தனக் கண்டு, கதிர்காமத்தம்பி, தங்கவடிவேல், சாந்தகுணதேவி, கமலராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2021) சிட்னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு::
சுரேஸ் : +61 422 883 955
சுகன்யா : +61 432 552 057

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 04 . 1925



இறப்பு 30 . 08 . 2021

## Late. MRS.Maheswary Nagaratnam

ஏழாலை வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நாகரத்தினம் நேற்று (30.08.2021) திங்கட்கிழமை கர்த்தருக் குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரிமளம் வைரமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு. வேலுப்பிள்ளை நாகரத்தினம் (Rtd. Teacher, Union College) அவர்களின் அன்பு மனைவியும், இரத்தின ஜெயா (Rtd. Engineer Australia) இரத்தின தயா (Rtd. Engineer Sri Lanka), இரத்தின தேவகி (Rtd. Teacher), இரத்தின ஜீவகி (UK), இரத்தின கிருபாரதன், இரத்தின ரூபகி, காலஞ்சென்ற இரத்தின சிறீவகி (DS Office, Manar) ஆகியோரின் அருமைத் தாயாரும், சாந்தா, வசந்தி, காலஞ்சென்ற ரெரன்ஸ் பிலிப்புப்பிள்ளை (Rtd. Co-ordinator, District Ministry, Mannar), அமிர்தநாயகம் (UK), சாந்தி, ஜெயராஜ் (Australia) சற்குண ராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிபர் (UK), நோட்டன் (UK), ஜோசப்பின் (UK), சறன், இவோன், நிரோஷன், டில்ஷன், சறோன், றொசிற்றா, வியூனிக்கா, கிறிஸ்ரீன், நிரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றிக்கி, றிஷான், ஜொலிற்றா, யூவான், ரமித்தா, காயேல், கிளியோ, எறிக், ஜஸ்லின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (31.08.2021) செவ்வாய்க் கிழமை ஏழாலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின் ஏழாலை வடக்கு CACM சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 528 2841

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

வடக்கில் கொரோனாத்தொற்று வேகமாகப்பரவிவரும் நிலையில், ஒரே நாளில் இவ்வாறு அதிகரித்த எண்ணிக்கையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

**போதனா மருத்துவமனை**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 282 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 99 பேருக்கு தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை மற்றும் கோப்பாய் பிரதேச மருத்துவமனை ஆகியவற்றில் தலா 18 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றைவிட, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 12 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றில் தலா இருவருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, வீனஸ் மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மல்லாவி ஆதார மருத்துவமனையில் 10 பேருக்கும், மன்னார் கடற்படை முகாமில் இருவருக்கும், வெள்ளாங்குளம் விமானப் படை முகாமில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நால்வருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் மூவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை, புளியங்குளம் பிரதேச மருத்துவமனை, மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**பருத்தித்துறை 30**

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவுக்கு நேற்று சிகிச்சைக்கு வருகை தந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 30 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 40 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 30 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த 30 பேரும் மருத்துவர்களின் ஆலோசனையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியவர்கள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்படவேண்டியவர்கள் மற்றும் வீடுகளில் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் என வகைப்படுத்தி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 210 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களில், கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 72 வயதுக்கு மேற்பட்ட இருவர் நேற்று உயிரிழந்தனர்.

**வவுனியா**

வவுனியாவில் மேலும் 215 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனை முடிவுகளின்படி அங்கு 215 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவலடைந்துள்ளது.

தொற்றாளர்களை கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**மரணவீட்டால்**
**28 பேருக்குத் தொற்று**

இதேவேளை, மேற்குறித்த 215 பேரில் 28 பேர் மரண வீட்டுக்குச் சென்றதனால் தொற்றுக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியா ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில், பட்டைபிரிந்தகுளம் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி மரணச்சடங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது. அதில் சுகாதார விதிமுறையை மீறி பலர் கலந்துகொண்டிருந்தனர். பின்னர் இறந்த அவரது குடும்ப உறுப்பினர்கள் இருவருக்கு சுகவீனம் ஏற்பட்டதனையடுத்து புளியங் குளம் மருத்துவமனைக்கு சென்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது இருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவினரால், மரணச்சடங்கில் கலந்துகொண்ட நெருங்கிய உறவினர்கள் 30 பேருக்கு நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் போதே 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தி, மரணச்சடங்கில் பங்கேற்ற ஏனையவர்களை இனங்கண்டு பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார விதிமுறையை மீறியவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

எனவே பொதுமக்கள் தனியாள் இடைவெளியைப் பின்பற்றி முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார விதிமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்துகின்றனர். (த-26,110,214)

## மருதங்கேணியில்...

டும் என்று சுகாதாரத் தரப்பு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குப் பரிந்துரைத்துள்ளது. அதன்படி, குறித்த கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எவரும் உட்செல்லவும் முடியாது, அங்குள்ளவர்கள் வெளியேறவும் முடியாதவாறு சுகாதார முடக்கம் மறுஅறிவித்தல்வரை விதிக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத் தரப்புத் தெரிவித்தது. இது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## சாவு...

இதுவே நாளொன்றில் இதுவரை பதிவான கொரோனா சாவுகளின் அதிகூடிய எண்ணிக்கையாகும்.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 115 ஆண்களும், 101 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 21 ஆண்கள், 20 பெண்கள் என 41 பேர் 30 க்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். 170 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 91 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 991 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 4 ஆயிரத்து 562 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 36 ஆயிரத்து 81 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 14 ஆயிரத்து 394 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 71 ஆயிரத்து 992 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## சா.தரப் பரீட்சை...

யாகியுள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சு அவதானம் செலுத்தி வருவதாக தெரியவருகின்றது. இந்தவிடயம் தொடர்பில் கல்வி அமைச்சுக்கும், பரீட்சைகள் திணைக்களத்துக்கும் இடையில் பேச்சு ஒன்று நடைபெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 6 லட்சத்து 22 ஆயிரம் மாணவர்களில், ஒரு லட்சத்து 70 ஆயிரத்துக்கும் குறைவான மாணவர்களே, சங்கீதம், நடனம் மற்றும் சித்திரம் போன்ற செயன்முறைப் பரீட்சைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர் என்று தெரியவருகிறது.

செயன்முறைப் பரீட்சைகளை எதிர்கொள்ளவேண்டிய மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு, ஏனைய மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை தாமதப்படுத்துவது, எதிர்வரும் பரீட்சைகளை நடத்துகின்றமை மற்றும் பெறுபேறுகளை வெளியிடுகின்றமை ஆகிய நடவடிக்கைகளில் பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களின் செயன்முறைப் பரீட்சைப் பெறுபேறுகள் அத்தியாவசியம் என்றால், அந்த மாணவர்கள், பாடசாலை மட்டத்தில் செயன்முறைப் பரீட்சையின் ஊடாக பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, பெறுபேறுகளை வெளியிட முடியும் என்றும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகின்றமையால், உயர்தர கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன என்பதைக் கருத்திற்கொண்டே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண சாதாரண தர பரீட்சை பரீட்சைகள் நிறைவுபெற்று, 6 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறாததால் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## உறவுகளுக்காக...

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவுகள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளும் முயற்சியில் நம்பிக்கை மற்றும் விரக்திக்கு மத்தியில் காத்திருக்கின்றனர்.

உண்மையைக் கண்டறிவதற்கான தேடல் அவர்களை ஆபத்துக்குள்ளாக்கும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கின்றனர்.

காணாமலாக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான போராட்டத்தின் முன்னணியில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களே இருந்து வருகின்றனர்.

அவர்கள் அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்குதல்கள் என்பவற்றை எதிர்கொள்ள முடியும்.

இலங்கையில் 2016ஆம் ஆண்டில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை அரசால் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு வழிமுறையாகும். இந்த அலுவலகம் சுயாதீனமாக இயங்க வேண்டும். குறித்த அலுவலகத்தின் வெற்றி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களுடைய உறவினர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பப்படுவதில் தங்கியிருக்கின்றது" என்றுள்ளது. (த-22)

## அதிபர்...

என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பள அதிகரிப்பு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரிய, அதிபர் சங்கங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## ஈழஉறவுகள்...

தேடிக்கொண்டிருக்கின்றனர் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சர்வதேச தினத்தையொட்டி அவர் நேற்று வெளியிட்டுள்ள ருவிற்றர் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்குவது பாதிக்கப்பட்டவர்களை மாத்திரம் அன்றி அவர்களது குடும்பங்களையும் சமூகத்தையும் பாதிப்படையச் செய்கின்றது என்றும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோக்கியோ பரா ஒலிம்பிக் தொடர் இலங்கைக்குத் தங்கப்பதக்கம்!

## ஈட்டி எறிதல் போட்டியில் தினேஸ் பிரியந்த ஹேரத் வென்றார்

**ரோக்கியோ, ஓக. 31**

**ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெற்றுவரும் பரா ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ஈட்டி எறிதல் பிரிவில் இலங்கைக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.**

இலங்கை வீரர் தினேஸ் பிரியந்த ஹேரத்தால் இந்த தங்கப்பதக்கம் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
அவர் 67.79 மீற்றர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து உலக சாதனை படைத்து இந்தத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இவர் கடந்த முறை பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் வெண்கலப் பதக்கம் வென்றமை குறிப்பி டத்தக்கது.
ரோக்கியோ நகரில் முன்னதாக ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. தற்போது பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)




# இராணுவ வீரரான பிரியந்தவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

*பராஒலிம்பிக் நாயகனுக்கு ஜனாதிபதி புகழாரம்*

கொழும்பு, ஓக. 31
ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெறும் பராஒலிம்பிக் போட்டியில், வரலாற்றில் முதன் முறையாக இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டித் தந்த இராணுவ வீரரான தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச. தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
தாய் நாட்டை கொடூரமான பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் இம்முறை சர்வதேச விளையாட்டு வரலாற்றின் பொன்னெழுத்துக்களில் இலங்கையின் பெயரை எழுதுவதற்கும் நீங்கள் அளிக்கும் அர்ப்பணிப்புக்கு மீண்டும் மீண்டும் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ம)






ரியல் மட்ரிட் அணிக்கும் நட்சத்திர வீரர் காஸ்மிரோவுக்கும் இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரு தரப்பும் இந்த ஒப்பந்த நீடிப்புத் தொடர்பான ஆவணத்தில் கைச்சாத்திட்டனர். (ம)

### ஆர்.சி.பி. பிளே ஓவ் சென்றால்

# வனிந்து ஹசரன்க, சமீர விளையாடுவதில் சிக்கல்

பெங்களூர், ஓக. 31
ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் விளையாட இலங்கை அணியின் வீரர்களான வனிந்து ஹசரன்க, சமீர இருவரும் ஒப்பந்தமாகியுள்ள நிலையில், அவர்கள் தொடர் முழுவதும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமான ஐ.பி.எல். தொடர் இடைநடுவே கைவிடப்பட்டது.
அதன் இரண்டாவது பாதி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இரண்டாவது பாதியில் விளையாடுவதற்காக வனிந்து ஹசரன்க, சமீர இருவரையும் பெங்களூர் அணி ஒப்பந்தம் செய்தது. அவர்கள் இருவரும் விரைவில் பெங்களூர் அணியுடன் இணையவுள்ளனர்.
ஆனால், பெங்களூர் அணி பிளே ஓவ் சென்றால் அதில் வனிந்து, சமீர இருவரும் விளையாட முடியாத நிலை ஏற்படும்.
ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்களில் விளையாட வேண்டியுள்ளதாலேயே அவர்கள் இருவரும் பிளே ஓவ் சுற்றைத் தவறவிடுவார்கள். (ம)



**வீடு வாடகைக்கு**
பிறவுண் றோட்டில் 4 அறை வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: **076 132 5353**

**காணி விற்பனைக்குண்டு**
நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 814 7389, 077 614 7333**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.